Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

TUESDAY, AUGUST 16, 2022

செவ்வாய்க்கிழமை ஒகஸ்ட் 16,2022 | ஒளி: 08 கதிர் 076 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | FREE

## 4 நாட்களுக்கு மூன்று மணிநேரம் மின்வெட்டு

### நுரைச்சோலை முதலாம் அலகிலும் கோளாறு



நுரைச்சோலை அனல்மின் நிலையத்தின் முதலாம் அலகில் கோளாறு ஏற்பட்டுள்ள நிலையில் அனல்மின் நிலையத்தின் முதலாம் அலகு திருத்தப்படும் வரை யுகதனவி மற்றும் ஏனைய எரிபொருள் உற்பத்தி நிலையங்கள் மூலம் மின்சார விநியோகத்தை நிர்வகிப்பதாக மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

தொடர்ச்சி P12

# புலம்பெயர் அமைப்புகளுக்கான அழைப்பு



## சந்திக்க தயார்

ஜனாதிபதி ரணிலின் நிர்வாகம் உலகத் தமிழர் பேரவை, பிரிட்டன் தமிழர் பேரவை, கனடா தமிழ்க் காங்கிரஸ், அவுஸ்திரேலிய தமிழ்க் காங்கிரஸ், உலக திராவிட ஒருங்கிணைப்புக் குழு மற்றும் திராவிட ஈழ மக்கள் சம்மேளனம் ஆகிய ஆறு அமைப்புக்கள் மீதான தடையும், 316 தனிநபர்களுக்குமான தடையும் நீக்கியுள்ளது. இந்நடவடிக்கையை நான் வரவேற்கிறேன்.

தொடர்ச்சி P2

## சரியான தருணம்



புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடையை நீக்குவதற்கான நடவடிக்கை மேற்கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் இந்த தீர்மானத்தினை நல்லெண்ணச் சமிக்கையாக புலம் பெயர் உறவுகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## இலங்கை –இந்திய பாதுகாப்பை "டோர்னியர்-228" மேம்படுத்தும்



இலங்கை இந்தியாவிடமிருந்து பெற்றுக்கொள்ளும் இரண்டு டோர்னியர்-228 ( Dornier 228 ) கடல்சார் உளவு விமானங்களில் முதலாவது விமானம் நேற்று (15) முற்பகல் கட்டுநாயக்க விமானப்படை தளத்தில் தரையிறங்கியது.

தொடர்ச்சி P2

## சர்வகட்சிக்கு இணக்கம்




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான சர்வகட்சி அரசாங்கத்தில் இணைந்து பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்களான சம்பிக்க ரணவக்க மற்றும் குமார் வெல்கம ஆகியோர் இணக்கம் தெரிவித்துள்ளதாக கூறப்படுகின்றது. ஜனாதிபதியுடனும் ஆளுந்தரப்பின் முக்கிய உறுப்பினர்களுடனும் முன்னெடுத்த பேச்சுவார்த்தைகளின் பின்னர் இவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்ச்சி P2

## தேர்தலை நடத்தும் நோக்கமே இல்லை

பா.நிரோஸ்



மாகாண சபைகளுக்கான தேர்தலை காலந்தாழ்த்துவதற்கு எதிராக தேர்தல்கள் ஆணைக்குழு பகிரங்கமாக தமது எதிர்ப்பை அறிவிக்க வேண்டும். வெறுமனே கடிதம் எழுதி சரிவராது என எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ல லக்ஷ்மன் கிரியெல்ல தேர்தல் ஆணைக்குழுவுக்குக் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியிடம் பசில் கோரிக்கை



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்னாள் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ, முக்கிய கோரிக்கையொன்றை முன்வைத்துள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனடிப்படையில், அடுத்த அமைச்சரவை மாற்றத்தின் போது, ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, பவித்ரா வன்னியாரச்சி, மஹிந்தானந்த அளுத்கமகே, ரோஹித அபேகுணவர்ன, நாமல் ராஜபக்ஷ, உள்ளிட்டோருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோப் - எரான்: கோபா - கபீர்

### ஐக்கிய மக்கள் சக்தி பரிந்துரை

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாம் கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் பாராளுமன்ற தெரிவுக்குழுக்கள் நியமிக்கப்படவுள்ளன.

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தி, தனது இரண்டு உறுப்பினர்களை, கோப், கோபா குழுக்களின் தலைவர் பதவிகளுக்கு நியமிக்க பரிந்துரைத்துள்ளது.

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) தலைவர் பதவிக்கு எரான் விக்ரமரத்னவின் பெயரையும், அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் (கோபா) தலைவர் பதவிக்கு கபீர் ஹஸீமின் பெயரையும் பரிந்துரைத்துள்ளனர்.

ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாம் கூட்டத்தொடர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முடிவுறுத்தப்பட்டதால், இவ்விரு குழுக்கள் உட்பட 50க்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான செயற்குழுக்கள் செயலிழக்கப்படுள்ளன.



## இந்திய சுதந்திர தினம்

இந்திய சுதந்திரத்தின் 75 ஆண்டுகள் நிறைவானது இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் நேற்று (15) மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது. கொழும்பு, இந்திய இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வில், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்திய தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

## டானிஷ் அலிக்கு பிணை



இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் சட்டவிரோதமாக நுழைந்து, ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்தியமை சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த டானிஷ் அலியை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் நந்தன அமரசிங்க உத்தரவிட்டுள்ளார்.

குறித்த வழக்கு நேற்று (15) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பிணை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் ஜூலை மாதம் 13ஆம் திகதி பலவந்தமாக நுழைந்து, ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்தியமை தொடர்பில் அவரை கைதுசெய்ய நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

தொடர்ச்சி P2



## 15 வயதுக்கு மேல் டிஜிட்டல் அட்டை

தேசிய அடையாள அட்டையைப் பெற்ற 15 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கும் புதிதாக டிஜிட்டல் அடையாள அட்டையை வழங்குவதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளதாக திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஐ.எம்.எப்பை வரவேற்போரை கடலில் தூக்கியெறிய வேண்டும்

பா.நிரோஸ்

நாட்டின் நெருக்கடி நிலைமைகளுக்கு சர்வதேச நாணய நிதியமே காரணம் என தெரிவிக்கும் சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார, சர்வதேச நாணய நிதியத்தை வரவேற்போரை கடலில் தூக்கியெறிய வேண்டும் எனவும் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## 200க்கு அதிகமான மருந்துகளுக்கு தட்டுப்பாடு



நாட்டில் இருநூறுக்கும் அதிகமான அத்தியாவசிய மருந்துகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளார். 2022 ஆம் ஆண்டின் முதல் மூன்று மாதங்களுக்கு மருந்துகளை இறக்குமதி செய்வதற்காக மாத்திரம் 12.4 பில்லியன் ரூபாய் செலவுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## புறப்பட்டது 'பிஎன்எஸ் தைமூர்'; வருகிறது 'யுவான் வாங் 5'

உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு கொழும்பு துறைமுகத்தில் நங்கூரமிட்டிருந்த பாகிஸ்தான் கடற்படைக்குச் சொந்தமான 'பிஎன்எஸ் தைமூர்' என்ற கப்பல், விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்று (15) புறப்பட்டுச் சென்றது.

ஒகஸ்ட் 12 ஆம் திகதியன்று கொழும்பு துறைமுகத்துக்கு வந்த கப்பலுடன் வந்திருந்த பாக். கடற்படையினருக்கும் இலங்கை கடற்படையினருக்கும் இடையில் ஒன்றிணைந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்நிலையில், இராஜதந்திர மட்டத்தில் கடும் சர்சைகளை ஏற்படுத்தியிருக்கும் சீனாவின் புலனாய்வு கப்பலா 'யுவான் வாங் 5' ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் இன்று (16) நங்கூரமிடவுள்ளது. இந்தக் கப்பல் 11 ஆம் திகதியன்று வருகைதரவிருந்தது எனினும், இந்தியா, இலங்கை மற்றும் சீனாவுக்கு இடையில். இராஜதந்திர மட்டத்தில் இந்தக் கப்பல் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது.

இந்நிலையில், தமது தேசிய பாதுகாப்புக்கு பாரிய அச்சுறுத்தலாக அமைந்துள்ள சீனாவின் 'யுவான் வாங் 5' கப்பலின் விஜயத்தை நிறுத்துமாறு இராஜதந்திர மட்டத்தில் இலங்கைக்கு வலியுறுத்தியும் இலங்கை அதனை கருத்தில் கொள்ளாது சீனாவின் 'யுவான் வாங் 5' ஆய்வுக் கப்பலை ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிட இலங்கை அனுமதி வழங்கியுள்ளதாக இந்திய உயர்மட்டம் அதிருப்தியடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




தொடர்ச்சி P2

# சந்திக்க தயார்

ஆனால், தடை நீக்கம் மாத்திரம் அவர்களை திருப்திப்படுத்த போவதில்லை என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 52 பில்லியன் டொலர் கடன்சுமை, நாட்டை நடத்த மாதாந்த 500 மில்லியன் டொலர் தேவை ஆகிய வரலாறு காணாத பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்துள்ள அனைத்து தமிழ், சிங்கள மக்களின் ஒத்துழைப்புகளை நாம் நாட வேண்டும். இதற்காக கால தாமதம் செய்யாமல், இந்நாட்டின் தேசிய ஐக்கியம் மற்றும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பிலும், ஊழலற்ற நிதி நிர்வாகம் தொடர்பிலும் ஒரு குறைந்தபட்ச பொது கோட்பாடுகளை இலங்கை அரசு புலம்பெயர் இலங்கையர்களை நோக்கி அரசாங்கத்தின் உத்தரவாதமாக அறிவிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தியள்ளார்.

இந்த அடிப்படையில் தமிழ் அமைப்புகள் மட்டுமல்ல, இலங்கையில் இருந்து புலம் பெயர்ந்துள்ள சிங்கள மற்றும் அனைத்து மக்களது அமைப்புகளுடனும் சென்று உரையாட நான் தயாராக இருக்கின்றேன். ஒரு பக்கம் தமிழர் என்ற முறையிலும், மறுபுறம் தெற்கில் சிங்கள மக்கள் வாழும் கொழும்பு மாவட்ட எம்பி என்ற முறையிலும் நான் இந்த பாத்திரத்தை வகிப்பது பொருத்தமானது என நம்புகிறேன். அரசில் அமைச்சு பதவிகளை பெறுவதை விட இதுதான் பிரயோஜனமானது எனவும் நான் நம்புகிறேன் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

# சரியான தருணம்

புலம்பெயர் உறவுகள் இந்தச் சந்தர்ப்பத்தினை சரியான சந்தர்ப்பமாக பயன்படுத்தி, நாட்டில் வாழ்ந்து வருகின்ற தங்களுடைய உறவுகளின் பொருளாதார பலத்தை கட்டியெழுப்புவதற்கு முன்வரவேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கான ஆதரவினை எந்தவிதமான சஞ்சலமும் இன்றி துணிச்சலாக வெளிப்படுத்திய ஈ.பி.டி.பி. கட்சி, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைூவேற்றும் வகையில் சுமார் 10 அம்சக் கோரிக்கை முன்வைத்திருந்தது.

அதில் ஒன்றாக புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தடை நீக்கப்பட வேண்டும் என்பதும் உள்ளடக்கப்பட்டிருந்தது என்று சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தடை நீக்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தினை புலம்பெயர் உறவுகள் சரியான சந்தர்ப்பமாக பயன்படுத்தி, நாட்டில் வாழ்ந்து வருகின்ற தங்களுடைய உறவுகளின் பொருளாதார பலத்தை கட்டியெழுப்புவதற்கு முன்வரவேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் ஏனைய கோரிக்கைகளும் முன்னுரிமை அடிப்படையிலாயினும் நிறைவேற்றப்படுவதுடன், தடைசெய்யப்பட்டுள்ள முஸ்லிம் அமைப்புக்கள் தொடர்பாகவும் ஆராய்ந்து நியாயமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியை வலியுறுத்தியுள்ளார்.

# 4 நாட்களுக்கு...

இதேவேளை முதலாம் அலகில் திருத்த வேலைகள் முடியுவரை நாளாந்த மின்வெட்டு மூன்று மணித்தியாலங்களாக அதிகரிக்கப்பட உள்ளதாக இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அதற்கமைய இன்று (16) முதல் 19 ஆம் தாக்கத்தை நாளாந்தம் வரை 3 மணி நேரம் மின்வெட்டு ஏற்படும் எனவும் தெரிவித்துள்ளனர்.

மின் வெட்டு ஏற்படும் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள "ABCDEFGHIJKLPQRSTUVW" ஆகிய பகுதிகளில் பகல் நேரத்தில் ஒரு மணி நேரமும் 40 நிமிடமும், இரவில் ஒரு மணி 20 நிமிடமும் மின் துண்டிக்கப்படும்.

அதேபோல் குழு "CC"க்கு காலை 6.00 மணி முதல் 8.30 மணி வரை இரண்டரை மணித்தியாலங்கள் மின் துண்டிக்கப்படும். அத்துடன் குழுக்கள் " MNOXYZ " காலை 5.30 முதல் 8.30 வரை 3 மணி நேரம் மின் துண்டிக்கப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

# டானிஷ் அலிக்கு...

இதனை அடுத்து சில தினங்களின் பின்னர் விமான நிலையம் ஊடாக வெளிநாட்டுக்கு செல்ல முயற்சித்த நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை -இந்திய...

இந்திய அரசாங்கத்தினால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட டோர்னியர்-228 விமானம் இதன்போது உத்தியோகபூர்வமாக இலங்கையிடம் கையளிக்கப்பட்டது.

இந்தியா மற்றும் இலங்கையின் பாதுகாப்பு மேம்படுத்தப்படுவதுடன் டோனியர் 228 விமானம் பரிசளிக்கப்படுகின்றமை இந்த இலக்கிற்காக இந்தியா வழங்கும் சமீபத்திய பங்களிப்பாகும் என உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய தூதுவர் ஆகியோரின் தலைமையில் இதற்கான நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே டோர்னியர்-228 விமானத்துக்கான ஆவணத்தை கையளித்தார்.

"பரஸ்பர புரிந்துணர்வு,நம்பிக்கை மற்றும் ஒத்துழைப்பால் இந்தியா மற்றும் இலங்கையின் பாதுகாப்பு மேம்படுத்தப்படுவதுடன் டோனியர் 228 விமானம் பரிசளிக்கப்படுகின்றமை இந்த இலக்கிற்காக இந்தியா வழங்கும் சமீபத்திய பங்களிப்பாகும்", என்று உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே குறித்த இந்நிகழ்வில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியாவுடனான ஒத்துழைப்பினால் ஏனைய துறைகளில் கிடைக்கப்பெற்ற பலன்களைப் போலவே, இலங்கை விமானப்படைக்கு டோனியர் பரிசளிக்கப்பட்டமையும் முக்கியமானதாக காணப்படுவதுடன், கடல் பாதுகாப்பு குறித்த தேவைகளை இலங்கை நிவர்த்தி செய்வதற்கான ஒரு படியாகவும் கருதப்படுகின்றது எனவும், வங்காள விரிகுடா மற்றும் இந்து சமுத்திர பிராந்தியங்களிலுள்ள, இலங்கை போன்ற அயல் மற்றும் நட்பு நாடுகளின் பலத்தினை வலுவாக்குவதிலும் இந்தியாவின் வல்லமை உறுதுணையாக நிற்கின்றமைக்கு இது ஒரு சிறந்த உதாரணமாகும் எனவும் இந்திய தூதரகம் ட்விட்டரில் தெரிவித்துள்ளது.

# சர்வகட்சிக்கு...

சர்வகட்சி அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புகளை எடுத்து தற்போதைய நெருக்கடி நிலைமைகளை கையாள சம்பிக்க ரணவக்க எம்.பி தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளதாகவும், அதேபோல் குமார் வெல்கம எம்.பியம் அதற்கு இணக்கம் தெரிவித்ததாக அமைச்சரவை அமைச்சர் ஒருவர் உறுதிப்படுத்தினார்.

இந்த வார இறுதிக்குள், அல்லது அடுத்த வாரத்தில் மீண்டும் அமைச்சரவை மறுசீரமைப்பு இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாகவும், இதன்போது எதிர்க்கட்சியில் இருந்து மேலும் சிலர் இணைந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# 200க்கு அதிகமான...

உயிர் காப்பு மருந்துகள், அத்தியாவசிய மருந்துகள் மற்றும் ஏனைய மருந்துகள் என மொத்தமாக 1140 மருந்து பொருட்கள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. இவற்றில் அத்தியாவசியமான 200க்கு அதிகமான மருந்துகளுக்கு இப்போது பாரிய அளவிலான தட்டுப்பாடு நிலவுகின்றது என்றார்

அதேபோல் பரிசோதனை இயந்திரங்கள் உள்ளிட்ட அவசியமான மருத்துவ உபகரணங்களும் 40 சதவீதமாக தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆகவே இப்போது மருந்து தட்டுப்பாடு குறித்த உண்மையான தரவுகளையும், நிலைமையையும் உரிய அதிகாரிகள் வெளிப்படுத்த வேண்டும். பல வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு நிலவுவதாக அறிய முடிகின்றது என்றார்.

# தேர்தலை நடத்தும்...

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை வலியுறுத்தினார்.

மாகாண சபைகளுக்கான தேர்தலை எப்போது நடத்துவது என்பது தொடர்பான தீர்மானம் எடுப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உள்ளது. அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துக்கு முன்னர் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும். இதன்போது தேர்தல் ஆணைக்குழு என்ன செய்யப்போகின்றது என பார்ப்போம் எனவும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவதற்கான நோக்கம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு இல்லை. அரசாங்கத்துக்கு தேர்தலில் வெற்றி கிடைக்குமாக இருந்தால் ஆணைக்குழு இந்தத் தேர்தலை நடத்தும். இல்லை என்றால் தேர்தலை காலந்தாழ்த்தும் எனவும் கூறினார்.

# புறப்பட்டது 'பிளன்எஸ்...

சீனாவின் 'யுவான் வாங் 5' கப்பலை நிறுத்துமாறு இந்தியா மட்டுமல்லாது அமெரிக்கா, பிரான்ஸ் ஆகிய நாடுகளும் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்திருந்த போதிலும், சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடனுதவி பெறும் வாய்ப்பை சீனா தாமதப்படுத்தி இலங்கையின் பொருளாதாரத்தை சீர்குலைக்கும் என்ற அச்சத்தில் இலங்கை இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இம்மாத இறுதியில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவிற்கான விஜயம் ஒன்றினை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் இந்தியாவின் பக்கமிருந்து அது நிராகரிக்கப்ப ட்டுள்ளதாகவும், அதற்கான காரணங்கள் தெரிவிக்காத போதிலும் சீன கப்பல் விவகாரம் அதற்கு பிரதான காரணமாக இருக்கும் எனவும் இந்திய தரப்பு தெரிவிக்கின்றது.

எவ்வாறு இருப்பினும் இன்று (16) காலை 11.30 மணியளவில் சீன கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடையும் என எதிர்பார்ப்பதாகவும், எதிர்வரும் 21 ஆம் திகதி வரையில் இலங்கையில் நங்கூரமிடப்ப ட்டிருக்கும் எனவும் இலங்கை கடற்படை தெரிவித்தது.

# 15 வயதுக்கு...

ஒவ்வொரு தனி நபரினதும் அதிகமான தரவுகளை உள்ளடக்கிய புதிய அடையாள அட்டையை வழங்குவது சகல செயற்பாடுகளுக்கும் இலகுவாக இருக்கும் என்பதை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வெறுமனே அடையாள இலக்கம் மட்டுமே உள்ளடக்காது, கல்வி தகைமைகள், சுகாதார செயற்பாடுகள், கைரேகைகள், ரத்த வகை போன்ற பல்வேறு விடயங்களை உள்ளடக்கியதாக இது தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

# ஐ.எம்.எப்பை வரவேற்போரை...

தெரிவித்தார்.

அரசாங்கத்தில் உள்ள பலரும் அதேபோல் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலரும் சர்வதேச நாணய நிதியத்திடம் நிதி உதவிகளைப் பெற வேண்டும் என கூறுகிறார்கள். உண்மையில் இவர்கள் எவருக்கும் சர்வதேச நாணய நிதியத்தைப் பற்றி தெரியாது எனவும் தெரிவித்தார்.

16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை உதவிகளைப் பெற்றுள்ளது. 1978ஆம் ஆண்டு முதல் இலங்கையில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் படியே செயற்படுகிறது. நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடிக்கும் இந்த நிதியமே காரணம். யுக்ரைன் யுத்தத்துக்கும் இதுவே காரணம் எனவும் தெரிவித்தார்.

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த பலரும் ஐ.எம்.எப் காரர்களாகியுள்ளனர். இலங்கை ரூபாயின் வீழ்ச்சிக்கும், அரச நிறுவனங்கள் பல தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டமைக்கும் ஐ.எம்.எப்பே காரணம் எனவும் தெரிவித்தார்.

# வீட்டில் இரண்டு மனைவிகள்: யுவதியை கடத்தி துஷ்பிரயோகம்

வீட்டில் இரண்டு மனைவிகள் இருக்கின்றனர். அதிலொரு மனைவி, கர்ப்பிணியாக இருக்கின்றார். இந்நிலையில், வீதியால் சென்றுக்கொண்டிருந்த 17 வயதான யுவதியை, காட்டுக்குள் இழுத்துச் சென்று, கைகள்,கால்களை கட்டிவைத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்திய சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இரத்தினபுரி தெல்வல பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ள இந்த சம்பவத்துடன் தொடர்புடைய நபர், கடந்த 11ஆம் திகதியன்று சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

30 வயதான சந்தேகநபர், இரண்டு பிள்ளைகளுக்கு தந்தையாவார். அவ்விரண்டு பிள்ளைகளும் முதலாவது மனைவியுடையது. இரண்டாவது மனைவி கர்ப்பிணியாக இருக்கின்றார்.

துஷ்பிரயோக குற்றச்சாட்டு, மோட்டார் சைக்கிள்களை களவெடுத்தல், நபர்களின் மீது அசிட் வீச்சு தாக்குதல் நடத்தியமை, கசிப்பு விற்பனை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ், இரத்தினபுரி, அத்துருகிரிய மற்றும் மத்துகம ஆகிய நீதிமன்றங்களில் சந்தேநபருக்கு எதிரான வழக்குகள் நிலுவையில் உள்ளன.

கசிப்பு வியாபாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட மேற்படி நபர், ஒரு இலட்சம் ரூபாயை தண்டமாக செலுத்தியுள்ளார்.

சம்பவ தினத்தன்று 17 வயதான யுவதி தன்னுடைய இளைய சகோதரியை பாடசாலைக்கு கொண்டுச்சென்று விட்டுவிட்டு, மீண்டும் வீட்டுக்கு நடந்து வந்துகொண்டிருந்த போது, இடையில் மறைந்திருந்த சந்தேகநபர், அந்த யுவதியை காட்டுப் பக்கமாக இழுத்துச் சென்றுள்ளார்.

அப்போது அந்த யுவதி அபாய குரல் எழுப்பி, உதவிக்கு அழைத்துள்ளார். எனினும், யாரும் உதவிச் செய்யவில்லையென பொலிஸாரின் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

மகள் காணாமல் போன விவகாரம் தொடர்பில் யுவதியின் தாய், பொலிஸில் செய்திருந்த முறைப்பாட்டுக்கு அமைய, பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போதே, சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேநபர் கைது செய்யப்படுவதற்கு முன்னர், அந்த யுவதி தன்னுடைய அலைபேசியில் இருந்து பொலிஸ் நிலையத்துக்கு பல அழைப்புகளை எடுத்துள்ளார். அவ்வாறு அழைப்பை எடுத்த யுவதி, தான் தன்னுடைய காதலனின் வீட்டில் இருக்கின்றேன். மறுநாள் வீட்டுக்குச் சென்றுவிடுவேன் எனத் தெரிவித்துள்ளார்.

அன்றையதினம் கடத்திச் சென்றிருந்த சந்தேகநபர், கைகள், கால்களை தேயிலை செடியுடன் கட்டிவைத்து அன்றிரவு 11 மணியளவிலேயே யுவதியை துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

எனினும், பொலிஸில் முறைப்பாடு செய்யவேண்டாம் என்றும் அந்த யுவதியிடம் சந்தேகநபர் கேட்டுக்கொண்டுள்ளார் என்றும் விசாரணைகளின் ஊடக கண்டறியப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட அன்றையதினம் காலையில் இருந்து மறுநாள் காலை வரையிலும் தன்னுடைய கைகள், கால்கள் கட்டப்பட்டிருந்தன என்றும், அன்றையதினம் இரவு 11 மணியளவில் கட்டுகளை அவிழ்த்துவிட்டார் என்றும் யுவதி செய்திருந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது,

துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் பொலிஸ் முறைப்பாடு செய்யாவிடின், தனது வீட்டை 65 ரூபாய்க்கு விற்று, தனக்கு தருவதாகவும், துஷ்பிரயோத்துக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் சந்தேகநபர் தெரிவித்தார் என யுவதி செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை, நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

# கப்பம் கோரும் கலாசாரத்தை கைவிடவேண்டும்

புலம்பெயர் அமைப்புகள், தனிநபர்கள் மீது தடையை வைத்துக்கொண்டு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் உதவிகளை எதிர்பார்க்க முடியாது. அதேபோல் இலங்கையில் முதலீடுகளை செய்யவரும் முதலீட்டாளர்களிடம் கப்பம் கேட்கும் நிலைமையொன்றே காணப்பட்டது. இப்போதும் அவ்வாறான தவறுகள் இடம்பெறாத வகையில் அரசாங்கம் பாத்துக்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளை கருத்தில் கொண்டு இதுவரை முன்னெடுக்காத பல்வேறு புதிய தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக நாட்டுக்கான முதலீடுகளை கொண்டுவர வேண்டும். ஆகவே தான் இப்போது புலம்பெயர் அமைப்புக்கள், தனிநபர்கள் மீதும் தடையை நீக்கி அதன் மூலமாக நாட்டுக்கான வருவாயை பெற்றுக்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கிறது. இது ஆரோக்கியமான விடயமாகவே கருதுகின்றோம்.

புலம்பெயர் அமைப்புகள், தனிநபர்கள் மீதும் தடையை வைத்துக்கொண்டு வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் உதவிகளை எதிர்பார்க்க முடியாது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் புலம்பெயர் அமைப்புகளின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானம் எடுத்தது. ஆனால் அப்போது எதிர்க்கட்சியாக இருந்த ராஜபக்ஷ கூட்டணி அதற்கான விமர்சனங்களை முன்வைத்து விடுதலைப்புலிகளை மீண்டும் நாட்டுக்குள் அழைக்க நடவடிக்கை எடுப்பதாக விமர்சித்தனர்.

இப்போது நாடு பொருளாதார ரீதியில் அதல பாதாளத்தில் விழுந்துள்ள நிலையில் நாட்டுக்கு முதலீடுகளை பெற்றுக்கொள்ள முதற்கட்டமாக சில புலம்பெயர் அமைப்புக்கள் மீதும் தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. ஆனால் கடந்த நல்லாட்சி காலத்தில் எமது தீர்மானத்தை அங்கீகரித்து அப்போதே புலம்பெயர் அமைப்புகளுக்கு அனுமதி வழங்கியிருந்தால் இன்று இவ்வாறான நிலையொன்று ஏற்பட்டிருக்காது. அதேபோல் இவ்வாறு இலங்கையில் முதலீடுகளை செய்யவரும் முதலீட்டாளர்களிடம் கப்பம் கேட்கும் நிலையொன்று காணப்பட்டது. இப்போது அவ்வாறான தவறுகள் இடம்பெறாத வகையில் அரசாங்கம் பாத்துக்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# மதுபான தரத்தை அறிய செயலி

முறையான தரம் வாய்ந்த உள்நாட்டு மதுபான போத்தல்களை அடையாளம் காணும் விசேட செயலியொன்றை இரண்டு வாரங்களில் அறிமுகப்படுத்த உள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. குறித்த செயலியை இதற்கு முன்னர் அறிமுகப்படுத்தப்படவிருந்ததாகவும், ஆனால் தொழில்நுட்ப கோளாறு காரணமாக அது தாமதமாகியதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த கணனி செயலி ஊடாக மதுபான போத்தல்களில் ஒட்டும் ஸ்டிக்கரைக் கொண்டு, நுகர்வோர் அனைத்து விபரங்களையும் அறிந்துகொள்ள முடியும் எனவும், போலி மதுபானங்களை தடுப்பதே இதன் முக்கிய நோக்கமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இறக்குமதி செய்யப்படும் மதுபானங்களின் ஏற்கனவே இந்த கணனி செயலி அறிமுகப்ப டுத்தப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கோட்டாவை முன்மொழிந்தவர்கள்

# நாட்டு மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்கவேண்டும்

பா.நிரோஸ்

ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு அரசாங்கம் வழங்கியிருந்த வாக்குறுதிகளின் அடிப்படையிலேயே புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதான தடையை அரசாங்கம் நீக்கியுள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். ஜனாதிபதிப் பதவிக்கு கோட்டாபய ராஜபக்ஷவை முன்மொழிந்தவர்கள் நாட்டு மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் கூறினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்துள்ளார். நாடு பிச்சை எடுத்து உண்ணுவதால் நாட்டின்



சுயாதீனத்தன்மை இல்லாமல் போயுள்ளது. சீன கப்பலுக்கு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு அனுமதியளித்துவிட்டு, வர வேண்டாம் என கூறுவது தவறு எனவும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்புக்கூற வேண்டியவரல்ல. இந்த அரசாங்கத்தோடு ரணிலால் பயணிக்க முடியாது. எந்தவொரு அரசாங்கமும் நாட்டை இதுபோல வங்குரோத்து நிலமைக்கு தள்ளியதில்லை. எனவே ஜனாதிபதிப் பதவிக்கு கோட்டாபய ராஜபக்ஷவை முன்மொழிந்தவர்கள் நாட்டு மக்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும் எனவும் கூறினார்.

மத்திய வங்கியின் கையிருப்பில் 300 மில்லியன் அமெரிக்க டொலர்களே கையிருப்பில் இருக்கின்றன. நாட்டுக்கு தேவையான அத்தியாவசிய பொருள்களைப் பெற்றுக்கொள்ள மாதமொன்றுக்கு நாட்டுக்கு 500 மில்லியன் டொலர்கள் தேவைப்படும். கடன் உள்ளிட்டவற்றை செலுத்துவதற்கு வருடமொன்றுக்கு 11 ஆயிரம் மில்லியன் டொலர்கள் தேவை. ஆனால் இது தொடர்பில் ஊடகங்கள் கவனம் செலுத்துவதில்லை எனவும் தெரிவித்தார்.




## வீட்டில் இருந்தே கடலுணவுகளை பெற்றுக்கொள்ள ஏற்பாடு

பொது மக்கள் தமக்குத் தேவையான கடலுணவுகளை ஒன் - லைன் மூலம் பெற்றுக் கொள்வதற்கான பொறிமுறை ஒன்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. குறித்த சேவை இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் பம்பலப்பிட்டி மீன் விற்பனை நிலையத்தில் நேற்று (15) சம்பிரதாயபூர்வமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைத்தார். அதனடிப்படையில் நேற்று தொடக்கம் 'பிக் மீ' சேவை ஊடாக இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் விற்பனை நிலையங்களில் இருந்து தேவையான கடலுணவுகளை மக்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறப்புற்றது மன்னார்

## மடு அன்னையின் ஆவணி பெருவிழா

### இலட்சக்கணக்கான பக்தர்கள் வருகை

எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் - மருதமடு அன்னையின் ஆவணி மாத பெருவிழா, மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில், நேற்று திங்கட்கிழமை (15) காலை 6.15 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.

அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபேட் அன்ராடி ஆண்டகை, கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் துணை ஆயர் மேதகு அன்ரன் ரஞ்சித் பிள்ளை நாயகம் ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.

இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் அன்னையின் ஆசிர்வாதத்தை வேண்டி, மடு திருத்தலத்துக்கு வருகை தந்தனர்.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து, மடு





அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெற்றது.

திருப்பலியில் மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் பி.கிறிஸ்து நாயகம் அடிகளார், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அகில இலங்கை கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஸ்தாபகர் அதி வண. பிதா அருட்கலாநிதி எஸ். சந்ரு பெர்னாண்டோ, இலட்சக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டு, மடு அன்னையின் ஆசியைபெற்றனர்.




## இதுவே எனது இறுதிக் காலம்

பா.நிரோஸ்

எனது அரசியல் வாழ்க்கையில் இது எனது இறுதிக் காலக்கட்டம். நான் இனி ஒருபோதும் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார். சமூகத்தில் திருடர்கள் இருப்பதைப்போல பாராளுமன்றத்திலும் திருடர்கள் இருக்கிறார்கள் எனவும் அவர் விமர்சித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார், சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் பலரும் பலதைக் கூறினாலும் தற்போது வரையில் கலந்துரையாடல் மட்டத்திலேயே இது உள்ளது. யுத்த காலத்தில் கூட எதிர்க்கட்சியும், ஆளுங்கட்சியும் இணைந்த செயற்பட முடியாத நிலையே நாட்டில் காணப்பட்டது. இந்நிலையில், அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கே சர்வகட்சி அரசாங்கம் அமைக்கப்படுவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சுமத்தியுள்ளார்.

## அமைச்சர் சப்ரி- ஈரானின் தூதுவர் சந்திப்பு

வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரிக்கும் இலங்கைக்கான ஈரானின் தூதுவர் ஹஷீம் அஷ்ஜசாடனுக்கும் இடையில் நேற்றும் (15) சந்திப்பொன்று இடம்பெற்றது. இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைகளை கையாள ஈரானின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்வது குறித்து



இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளதுடன், இருதரப்பு நலன் சார்ந்த விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கொழும்புக்கு புதிய பஸ் சேவை

பொது போக்குவரத்துக்காக கொழும்பு உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் சொகுசு பஸ் சேவையை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். முதற்கட்ட நடவடிக்கையாக கொழும்பு உள்ளிட்ட புறநகர் பகுதிகளில் சுமார் 100 பஸ்கள் பயன்படுத்தப்படும் எனவும் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட விதமாக முன்னெடுக்கப்படுகின்ற போதிலும், கடந்த இரண்டு மாதங்களை விடவும் தற்போது நிலைமைகள் வழமைக்கு திரும்பியுள்ளதாகவும், எனவே எதிர்காலத்தில் இவ்வாறே சுமூகமான நிலைமைகள் காணப்படுமென தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்த அவர், பேருந்து கட்டணங்கள் குறித்தும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.










## இந்திய சுதந்திர தினம்...

இந்தியாவின் 75 ஆவது சுதந்திர தினத்தின் வைபவங்கள் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தலைமையில், கொழும்பு இல்லத்திலும் கண்டி உதவி உயர்ஸ்தானிகர் கலாநிதி அதிரா எஸ். தலைமையில் கண்டியிலும், கொன்ஸல் ஜெனரல் ஸ்ரீ ராகேஷ் நட்ராஜ் தலைமையில் யாழ்ப்பாணத்திலும் வெகு விமர்சையாக நேற்று (15) நடைபெற்றன.














காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம்

# வேறு பாதையில் நகர்கின்றது

## திலீபன் எம்.பி எச்சரிக்கை

■ க.அகரன்

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான போராட்டம், அரசியல்வாதிகளின் பின்புலத்தால் போராட்டத்தில் உள்ள சிலர் வேறு பாதையை நோக்கி செல்லக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாக வன்னி மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈபிடிபி) வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவிக்கையில், "அனைத்து கட்சிகளையும் தம்முடன் பேசி சர்வகட்சியில் இணையுமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். ஆனால், சிலர் தலையையும், வாலையும் காட்டும் நிலை காணப்படுகின்றது.

"காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் 2,000ஆம் நாட்களை கடந்துள்ளது. இதில் பலர் பலவிதமான கருத்துகளை முன்வைக்கிறார்கள்.


"இந்தப் போராட்டம் முதன் முதலில் வவுனியா மாவட்டத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டது. வெறும் 12 பேருடன் வவுனியா தபால் நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்பட்டது. அந்த 12 பேரில் நானும் ஒருவன். எனது நண்பர்கள், உறவுகளுடன் இணைந்து கட்சி பேதமின்றி எவ்வித அரசியலுமின்றி இந்த போராட்டத்தை முன்னெடுத்தோம்.

"ஆனால், நாட்கள் செல்லச் செல்ல சில அரசியல்வாதிகளின் பின்புலத்தால் போராட்டத்தில் உள்ள சிலர் வேறு பாதையை நோக்கி செல்லக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

"இது தொடர்பாகவும், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டம் தொடர்பாகவும் எமது அமைச்சர் ஊடாக ஜனாதிபதியிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளோம்.

"காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஒரு பரிகாரம் வழங்கப்படும். விரைவில் அதனை எழுத்து வடிவில் கொடுக்கவுள்ளோம். கலந்துரையாடி அந்தத் தீர்வு எட்டப்பட்ட பின் அதனை வெளிப்படுத்த முடியும்" என்றார்.







# பட்டமளிப்பு

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்தோடு, தமிழ் இணையக் கல்விக்கழகம் இணைந்து நடத்திய வட மாகாணத்தின் ஆறாவது பட்டமளிப்பு விழா யாழ்ப்பாணம் - சாவகச்சேரியில் அமைந்துள்ள பூமாரி மண்டபத்தில் நேற்று முன்தினம் (14) இடம்பெற்றது.

நிகழ்வில், இளங்கலைமாணி தமிழியல் சிறப்பு பட்டம் பெற்ற 107 மாணவர்களுக்கு பட்டங்களை யாழ். பல்கலைக்கழகத்தின் ஊடகத்துறை தலைவர் பேராசிரியர் சி.ரகுராம் வழங்கிவைத்தார்.

மேலும், தமிழியல் மேற்பட்டய கற்கையை மேற்கொண்ட 91 மாணவர்களுக்கான சான்றிதழ்களும், பட்டய கற்கையை மேற்கொண்ட 87 மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இதன்போது, இளங்கலைமாணி தமிழியல் சிறப்பு தேர்வில் முதல் நிலையுடன் சிறப்பு தேர்ச்சி பெற்ற நால்வருக்கு "இராஜராஜ சோழன் விருது"வழங்கி கௌரவிக்கப்பட்டது.

(படங்கள் - வி.நிதர்ஷன்)

# மானிப்பாயில் வாள்வெட்டு

## இளைஞன் படுகாயம்

■ வி.நிதர்ஷன்

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் (14) மாலை 6:10 மணியளவில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தெலிப்பழை முகவரியில் வசிக்கும் ஜெயக்குமார் சஜீந்திரன் என்ற 21 வயது இளைஞனே சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார் என மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

மானிப்பாய் நகரத்தில் அமைந்துள்ள சுப்பர் மார்கெட் ஒன்றில் மேற்படி இளைஞன் பணிபுரிந்து வந்துள்ளார்.

சம்பவ தினமான நேற்று முன்தினம் மாலை, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத மூவர், இளைஞனின் இடது கையை வெட்டிச் சென்றனர்.



படுகாயமடைந்த இளைஞன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துக்கான காரணம் அறியப்படாத நிலையில், மானிப்பாய் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விவசாய நிலங்கள் உவர் நிலங்களாகின்றன

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி □ பூநகரி, கரியாலை, நாகபடுவான் பகுதியில் உள்ள உவர் நீர் தடுப்பணைகள் சேதமடைந்தமையால், சுமார் 6,000 ஏக்கர் விவசாய நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளன.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் உள்ள பல்லவராயன் கட்டு, கரியாலை, நாகபடுவான், குமுழமுனை மற்றும் நொச்சிமுனை ஆகிய பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள் கடந்த கால யுத்தம் காரணமாக கரையோரப்பகுதிகளில் காணப்பட்ட உவர் நீர்த்தடுப்பணைகள் சேதமடைந்துள்ளனர். இதன் காரணமாக கடல்நீர் உட்புகுந்து, கடந்த காலங்களில் விவசாயச் செய்கை நிலங்களாக காணப்பட்ட பயிர் செய்கை நிலங்கள் உவர் நிலங்களாக மாறியுள்ளன.

இவ்வாறு உவர் நீர்த் தடுப்பணைகள் அழிவடைந்து உவர் நீர் உட்புகுந்தமையால் சுமார் 6,000 ஏக்கர் வயல் நிலங்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளன.

பூநகரியில்

# குடிநீருக்கு தட்டுப்பாடு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் பல்வேறு பகுதியில் தொடர்ந்தும் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

தமக்கான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் இப்பகுதி மக்கள் அன்றாடம் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருவதாக தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் அதிகூடிய குடிநீர் நெருக்கடி நிலவும் பகுதியாக பூநகரி பிரதேசம் காணப்படுகின்றது.



அதாவது பூநகரி பிரதேசத்தில் உள்ள 19 கிராம அலுவலர் பிரிவுகளில் வாழ்ந்து வரும் 7,500 இற்கும் மேற்பட்ட குடும்பங்களில் 10 கிராம அலுவலர் பிரிவுகளில் வாழும் சுமார் 3,000க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வருடம் முழுவதும் குடிநீர் விநியோகிக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

அத்துடன், 09 பாடசாலைகளுக்கும் குடிநீர் தட்டுப்பாடு நிலவுகின்றது.

மக்களை வதைத்ததால்

# கோட்டாபய ஓடியொளிந்தார்

■ நூருல் ஹூதா உமர், எஸ்.சபேசன்

69 இலட்சம் மக்களின் வாக்கை பெற்ற முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தன்னை நம்பிய மக்களை பட்டினி போட்டு வதைத்ததன் விளைவாக அவர்கள் இட்ட சாபமும், பாதிக்கப்பட்ட மக்களின் பிராத்தனையுமே அவர் இன்று ஓடியொளிந்துள்ளமைக்கு காரணமாக உள்ளதாக, கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் தெரிவித்தார்.

செஞ்சோலை படுகொலையின் நினைவு நாளையொட்டி, அம்பாறை - வீரகெட திஸ்ஸபுர பிரதேசத்தில் வறுமை கோட்டுக்கு கீழ் வசிக்கும் மக்களுக்கு ரெலோ சர்வதேச அமைப்பின் "நமக்காக நாம்" வேலைத்திட்டத்தின் கீழ், வீரகெட திஸ்ஸபுர ஸ்ரீ சுதர்சநாராம விகாரையில் வைத்து நேற்று முன்தினம் (14) உலருணவுகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டே அவர் இவ்வாறு தெரிவித்தார்.




தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர், "இலங்கையில் பிறந்த கோட்டாபய இலங்கையில் வாழ முடியாமல் இன்று அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றார்.

அவர் மக்களிடமிருந்து கொள்ளையடித்த மக்களின் பணத்தை மக்களுக்காக செலவழித்து விட்டு அவரது சொந்த நாட்டுக்கு வந்து வாழ வேண்டும்.

"அவரை யாருமே நாட்டை விட்டு ஓடும்படி கேட்கவில்லை. மாறாக அவரது ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்யும் படிதான் மக்கள் போராட்டம் நடத்தினார்கள்.

"அரசியல்வாதிகள் மக்களின் வரிப்பணத்தில் சொகுசாக வாழ்கிறார்கள். ஆனால், மக்கள் வரியையும் செலுத்திக்கொண்டு, வாக்களித்து விட்டு, வாழ்க்கையை தொலைத்துள்ளனர். இந்நிலை மாற கிராம மட்டத்திலிருந்து மாற்றம் வரவேண்டும்" என்றார்.

# மோட்டார் சைக்கிளில் செல்கையில் செல்:.பி

## இளைஞர்கள் படுகாயம்

■ ப்.முபாரக்

வவுனியாவிலிருந்து திருகோணமலை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர்கள் இருவர், மாடுடன் மோதி விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (14) மாலை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் இளைஞர்கள் இருவரும் மோட்டார் சைக்கிளை செலுத்திக் கொண்டிருந்த வேளையில் கையடக்க தொலைபேசியில் செல்ஃபி எடுப்பதற்கு முற்பட்டுள்ளனர்.

இந்நிலையில், வீதியின் குறுக்கே வந்த மாடுடன் மோட்டார் சைக்கிள் மோதியதாகவும் இதனை அடுத்து இருவரும் படுகாயமடைந்த நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார். இவ்விபத்தில் வவுனியா-பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 28 மற்றும் 30 வயது உடையவர்களே படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து தொடர்பிலான விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# புகை விசுறும் நடவடிக்கை

■ எம்.எஸ்.எம்.ஹனீபா

அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்குட்பட்ட பிரதேசங்களில் டெங்கு நுளம்பு பெருகுவதை தடுக்கும் பொருட்டு புகை விசுறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, அக்கரைப்பற்று சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எப்.எம்.ஏ. காதர், நேற்று (15) தெரிவித்தார்.

அக்கரைப்பற்று பிரதேசத்தில் இரு வார காலத்துக்குள் அதிகமான டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதையடுத்து, அப் பிரதேசங்களில் கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனைக்கமைய, அக்கரைப்பற்று பிரதேசத்தில் டெங்கு நுளம்பு பரவலைக் கட்டுப்படுத்தும் முகமாக ஒருங்கிணைந்த பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

பாடசாலைகள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் மதஸ்தளங்கள் உட்பட டெங்கு பரவும் இடங்களாக அடையாளப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் புகை விசுறும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

கிணறுகளில் டெங்கு நுளம்பின் குடம்பிகள் உருவாகாமல் தடுப்பதற்கு மருந்துகள் இடப்பட்டு வருவதாகவும், குடிநீர் கிணறுகளில் டெங்கு நுளம்பை அழிக்கும் பொருட்டு மீன் குஞ்சிகள் இடும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு பரவக் கூடிய வகையில் பராமரிப்பின்றி இடங்களை வைத்திருப்பவர்களுக்கெதிராக நீதிமன்றின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுப்படுமெனவும் சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் எப்.எம்.ஏ. காதர் மேலும் தெரிவித்தார்.




மட்டு. – கல்லடி


# ஈழத்து திருச்செந்தூர் மகோற்சவம்

■ சுதா

மட்டக்களப்பு - கல்லடி ஈழத்து திருச்செந்தூர் முருகன் கோவில் வருடாந்த மகோற்சவ பெருவிழா, நாளை புதன்கிழமை (17) நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

முதல் 08 நாட்களும் திருவிழாக்கள் நடைபெற்று, 9ஆம் நாளாகிய 25.08.2022 வியாழக்கிழமையன்று பி.ப 3 மணியளவில் தேர்த்திருவிழாவும் 10ஆம் நாளாகிய 26.08.2022 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வங்கக் கடலில் சமுத்திர தீர்த்தோற்சவமும் இடம்பெற்று, இவ்வாண்டுக்கான மஹோற்சவ பெருவிழா நிறைவடையவுள்ளது.

இலங்கைத் திருநாட்டில் ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட கோவில்களில், தமிழ் மொழியில் மாத்திரம் வேத பாராயணங்கள் ஓதப்பட்டு முருகப்பெருமானுக்கு பூசை வழிபாடுகள் இடம்பெறும் ஒரேயொரு கோவிலாக ஈழத்து திருச்செந்தூர் முருகன் கோவில் திகழ்வது குறிப்பிடத்தக்கது.



மட்டு. மாவட்ட புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபர்

# கடமையை ஏற்றார்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தின் புதிய பிரதிப் பொலிஸ்மா அதிபராக சரத் குமார நேற்று (15) பதவியை பொறுப்பேற்றுக்கொண்டார்.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலய முன்றலில் இடம்பெற்ற அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்ட பின்னர், காரியாலயத்தில் உத்தியோகபூர்வமாக கையெழுத்திட்டு, கடமையை பொறுப்பேற்றார்.

மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம். சுகதபால, மாவட்ட பொலிஸ் அத்தியட்கர் எல்.ஆர்.குமாசிறி, தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எ.கி.ஐ.ஹெட்டியாராச்சி உட்பட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் திருமதி சரத் குமார ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராகக் கடமையாற்றிய தினேஸ் கருணாரத்ன, களுத்துறை மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து களுத்துறை மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக கடமைபுரிந்த சரத்குமார மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கபப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வரவிருக்கும் உணவு நெருக்கடியை எதிர்கொள்ள

# பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் நடவடிக்கை

இலங்கையின் பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் (RPCs) தமது நிலங்களில் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை அதிகரிக்க புதிய வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளன.

உணவுப் பாதுகாப்பை அதிகரிக்கும் நோக்கில் தேசிய முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் அதேவேளையில் உணவுப் பொருட்களின் விலையேற்றத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்கு தமது ஊழியர்களுக்கு விசேட ஆதரவை வழங்கி வருகின்றன.

இது குறித்து கருத்து தெரிவித்த இலங்கை பெருந்தோட்ட உரிமையாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர்



ரொஷான் இராஜதுரை, “இலங்கை தற்போது முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மூன்று வேளை உணவு கூட கிடைக்காத குடும்பங்களுக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்படக் கூடிய சாத்தியம் உள்ளது.

RPCகளாகிய நாங்கள் மக்கள் தற்போது எதிர்கொள்ளும் பிரச்சினை மிகுந்த நிலையை உணர்ந்தோம். இந்தச் சூழலைப் எதிர்கொள்வதற்கு பயிர்ச்செய்கையில் ஈடுபடுவதற்கு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பது இந்த நேரத்தில் அனைத்து தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் சமூகங்களின் கடமை என்று நாங்கள் நம்புகிறோம்.” என தெரிவித்தார்.

“தோட்டங்களில் உள்ள மக்களுக்கு அவர்களின் வாழ்க்கையைத் தக்கவைத்துக்கொள்ள உதவுவதன் மூலம், வரவிருக்கும் உணவுப் பற்றாக்குறையைத் தவிர்க்கும் இந்த தேசிய முயற்சிக்கு எங்களால் இயன்றதைச் செய்வதை RPCகள் நோக்கமாகக் கொண்டுள்ளன.

உணவு மற்றும் அத்தியாவசிய உலர் உணவுகளை விநியோகித்தல் மற்றும் சத்தான உணவை வழங்குவதற்காக சமூக சமையலறைகளை அமைப்பதன் மூலம் உணவு விலைகளின் உச்ச அளவிலான அதிகரிப்பின் தாக்கத்திலிருந்து எங்கள் தொழிலாளர்களை பாதுகாக்க RPCகள் தொடர்ச்சியான திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளன.” என இராஜதுரை மேலும் தெரிவித்தார்.



## பஸ் விபத்தில் நால்வர் காயம்

■ எஸ். கணேசன்

நுவரெலியா பகுதியிலிருந்து லபுக்கலை பகுதியை நோக்கி பயணித்த தனியார் பஸ் ஒன்று நுவரெலியா - கண்டி பிரதான வீதியில் லபுக்கலை மேற்பிரிவு பகுதியில் வீதியை விட்டு விலகி நேற்று

இந்த விபத்து நேற்று (14) மாலை இடம்பெற்றுள்ளது.

பஸ்ஸில் 30ற்கும் மேற்பட்டோர் பயணித்துள்ளதாகவும், விபத்தின் போது, 4 பேர் மாத்திரம் படுங்காயங்களுக்குள்ளா கியுள்ளனர்.

சாரதியால் வேகத்தை கட்டுப்படுத்த முடியாமல் போனதால் இந்த விபத்து நேர்ந்ததாக நேரடி விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ்விபத்தில் காயமடைந்த சிறுவர்கள் உட்பட 4 பேரும், நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கு தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். சம்பவம் தொடர்பில் நுவரெலியா போக்குவரத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ரயிலில் மோதி காயமடைந்தவர்களின்

## காதல் உறவு அம்பலம்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் மோதிய இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையொருவரும் யுவதி ஒருவருமே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் (14) பிற்பகல் இடம்பெற்ற இச்சம்பவத்தில் காயமடைந்த இருவரும் டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர், ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கும் யுவதி நுவரெலியா வைத்தியசாலைக்கும் மாற்றப்பட்டுள்ளனர்.

ஹட்டன்- கொட்டகலை ஆகிய ரயில் நிலையங்களுக்கு இடையில் உள்ள சிங்கமலை சுரங்கத்துக்கு அருகிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

27 வயதான இரண்டு பிள்ளைகளின் ஹட்டன்- எபோட்சிலி தோட்டத்தைச் சேர்ந்தவர் என்றும் 17 வயது யுவதி டிக்கோயா பகுதியைச் சேர்ந்தவர் என்றும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.


குறித்த இருவரும் ரயில் பாதையில் நடந்து சென்றுக்கொண்டிருந்த போது, பின்னால் வந்த ரயிலில் மோதுண்டுள்ளனர்.இதனால் இருவரும் கடும் காயமடைந்த நிலையில், ரயில் கட்டுபாட்டாளரால் ஹட்டன் ரயில் நிலையத்துக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதுடன் வைத்தியசாலைக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது, குறித்த இருவரும் காதலர்கள் என தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இரவோடிரவாக கொட்டப்படும் கழிவுகளால்

## வீ ஓயாவுக்கு அச்சுறுத்தல்

■ என். ஆராச்சி



புளத்கொஹுபிட்டிய -பெலம்பிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட பெலம்பிட்டிய தொடக்கம் தொலஸ்பாகை வீதியின் இஷட் வளைவுக்கு அருகில் சில நாட்களாக இரவு நேரங்களில் கழிவுகள் கொண்டு வந்து வீசப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில நாட்களாக இரவு வேளைகளில் குறித்த சட்டவிரோத செயற்பாடு முன்னெடுக்கப்ப டுவதாகவும் குறித்த கழிவுகளில் இலத்திரனியல் பொருட்கள் உள்ளிட்ட பல பொருட்கள் காணப்படுவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வீசப்படும் கழிவுகள் மழைக்காலங்களில் களணி கங்கையின் கிளை ஆறான வீ ஓயாவுக்கு அடித்துச் செல்லப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதற்கு முன்னரும் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றுள்ள நிலையில், கம்பளையைச் சேர்ந்த நபர் ஒருவர், தான் கழிவுகளை கொண்டு வந்து குறித்த இடத்தில் கொட்டிய தவறை ஒத்துக்கொண்டு, மீண்டும் அவரே கழிவுகளை எடுத்துச் சென்ற விடயங்களும் பதிவாகியுள்ளன.

எனவே கம்பளை பகுதியிலிருந்தே குறித்த கழிவுகள் எடுத்து வரப்பட்டு இஷட் வளைவுக்கு அருகில் கொட்டப்படுவதாக பிரதேசவாசிகள் நம்புகின்றனர்.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கின்றனர்.

## நோட்டன்- அட்லிஸ் பகுதிக்குபுதிய பாலம்

■ காமினி பண்டார



அண்மையில் மலையகத்தில் நிலவிய சீரற்ற வானிலையால் சேதமடைந்த நோட்டன்பிரிட்ஜ்- கினிகத்தேனை பிரதான வீதியின் அட்லிஸ் பகுதியில் பாரிய மண்சரிவு ஏற்பட்டதுடன் பிரதான விதியில் இருந்த சிறிய மதகும் மண்சரிவுக்கு உள்ளானது.

இதனால் குறித்த வீதியுடனான போக்குவரத்தில் பாரிய சிக்கல் ஏற்பட்ட நிலையில், விதி அபிவிருத்தி அதிகார சபையால் குறித்த பகுதியில் புதிய பாலமொன்று தற்காலிகமாக நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

குறித்த பகுதியில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட மண்சரிவால் இரண்டு வீடுகளும் சேதமடைந்ததுடன், ஒருவர் உயிரிழந்திருந்தார். இந்த நிலையிலேயே குறித்த பகுதியில் இரும்பிலான புதிய பாலமொன்று வீதி அபிவிருத்தி அதிகார சபையால் அமைக்கப்பட்டு வருகின்றது.

சாரதியின் தூக்கத்தால்

## கடைகளுக்குள் புகுந்த வான்

■ எஸ்.சதீஸ்



ஹட்டனில் இருந்து பொகவந்தலாவை, கெம்பியன் நோக்கி பயணித்த வான் ஒன்று, கெம்பியன் நகரில் உள்ள மூன்று வர்த்தக நிலையங்களை உடைத்து கொண்டு உட்புகுந்ததில், மூன்று சிறுவர்கள் காயங்களுக்கு உள்ளாகி, பொகவந்தலாவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் (14) பகல் 12மணியளவில் இடம் பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதில் ஒரு சலூனும் அடங்குவதாகவும் முடி வெட்டுவதற்காக சலூனுக்கு வருகை தந்திருந்த 03, 06, 8.வயதுடைய சிறுவர்களே காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை முடிந்து வீடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த மூன்று வர்த்தக நிலையங்களும் பகுதிஅளவில் சேதமடைந்துள்ளதுடன், கைதுசெய்யப்பட்ட வானின் சாரதி பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட வானின் சாரதி மது போதையில் இருந்தாரா என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும் சாரதிக்கு ஏற்பட்ட தூக்க கலக்கமே இந்த விபத்து காரணம் என தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

13ஆவது நாளாகவும் மூடப்பட்டுள்ளதால்

## மக்கள் பெரும் சிரமம்

■ எம்.பிரபா

மஸ்கெலிய பிரதேச சபைக்கு உட்பட்ட மஸ்கெலியா நல்லத்தண்ணீர் பாதை கடந்த 13 நாட்களாக தொடர்ந்து மூடப்பட்டுள்ளது.



இந்த மாதம் முதலாம் திகதி பெய்த மழை காரணமாக மஸ்கெலிய நல்லத்தண்ணீர் பாதையில் மோகினி எல்லைப்பகுதியில் ஏற்பட்ட மண்சரிவுக்காரணமாக இந்த பாதை முழுமையாக மண்ணால் நிரம்பியுள்ளது.

இதன் காரணமாக இந்த பாதையூடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளதுடன் இந்த மண்மேட்டின் ஊடாக நடந்து பயணிப்பதும் மிகவும் ஆபத்தானதாக காணப்படுகின்றது.

இதனால் இந்த பகுதியில் வாழும் சுமார் 15000ற்கும் மேற்பட்ட மக்கள் பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளனர்.

தமது தேவைகளுக்காக மாற்று பாதையாக லக்ஷபான தோட்டத்தின் வாழமலை பிரிவின் ஊடான சிறிய பாதையை மக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த பாதையானது மிக குறுகிய குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் சிறிய வாகனங்கள் மட்டுமே பயணிக்கக்கூடியதாக உள்ளது.

இந்த பாதைக்கும் மண்சரிவு ஏற்பட்டுள்ள இடத்திற்கும் இடையில் சுமார் 10 மீற்றர் தூரமே காணப்படுவதால் இந்த பாதையூடாக சிறிய ரக பஸ்களில் பயணிக்கும் பயணிகள் இந்த மண்சரிவு இடத்திற்கும் முன்னரே இறக்கி விடப்படுகின்றனர்.

சுமார் 250மீற்றர் தூரம் நடந்து, மீண்டும் பஸ்ஸில் ஏறி மஸ்கெலியா நோக்கி அல்லது நல்லத்தண்ணீர் நோக்கி பயணிக்கின்றனர்.

குறித்த இடத்தில் மீண்டும் மண்சரிவு ஏற்படுமாயின், தற்போது பயன்படுத்தி வரும் மாற்று பாதையும் பாதிப்பிற்கு உள்ளாகும் நிலை காணப்படுவதுடன் மவுசாக்கலை நீர்த்தேக்கத்திற்கு நீரை விநியோகிக்கும் நல்லத்தண்ணீர் ஆறும் மண்ணால் முழுமையாக நிரப்பப்படும் சாத்தியம் காணப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பாக பாதை அபிவிருத்தி அதிகார சபையின் நோர்வூட் காரியாலத்தினை பிரதம பொறியியலாளரை தொடர்புகொண்டு வினவியபோது, தேசிய கட்டட ஆராச்சி நிறுவன அதிகாரிகள் வருகை தர உள்ளதாகவும் அவர்களின் பரிசோதனையின் பின்னர் இந்த பாதையில் காணப்படும் மண்மேட்டினை எவ்வாறு அகற்றுவது என ஆராய உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## தகவல் தாருங்கள்

■ காமினி பண்டார

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிட்கு உட்பட்ட மஸ்கெலியா- லக்கம்பே கடை வீதிக்கு அருகிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் சுகயீனமுற்ற ஒருவர், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாகவும் இவரது உறவினர்கள் சடலத்தை பொறுப்பேற்குமாறும் மஸ்கெலியா பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் 75 வயது மதிக்கத்தக்க அங்கமுத்து சிங்காரவேல் என அடையாளம் காணப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கும் போது, நீல நிற நீள சட்டையும் நீல நிற சாரமும் அணிந்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் 1980- 85ஆம் ஆண்டு வரை அவரது மகனுடன் லக்கம்பே பகுதியில் வாழ்ந்து வந்துள்ள நிலையில், இருவரும் பின்னர் அப்பிரதேசத்தை விட்டு சென்றுள்ளதுடன், உயிரிழந்தவரின் மனைவி ஆசிரியை என்றும் தகவல் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவரின் உறவினர் தொடர்பான தகவல் தெரிபவர்கள் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் ஆரியரத்னவின் கைபேசி இலக்கமான 0718591126 அல்லது 052-2277222து இலக்கத்துக்கோ தகவல் தருமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பம்பரகல இளைஞன்

## சடலமாக மீட்பு

■ எஸ்.கணேசன்

இம்மாதம் 3 ஆம் திகதியில் இருந்து காணாமல் போயிருந்த - பம்பரக்கலை தோட்டத்தைச் சேர்ந்த 20 வயதான சுந்தரலிங்கம் சசிதரன் , நுவரெலியா சமூர்த்தி வங்கிக்கு அருகாமையில் உள்ள ஓடையில் இருந்து நேற்று (15) காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த முறைப்பாட்டில், கடந்த 3ஆம் திகதி வீட்டிற்கு விறகு தேடி வருவதாக கூறிவிட்டு சென்ற இளைஞன், அதன்பிறகு அவர் வீடு திரும்பவில்லை எனவும், அத்தோடு, விறகு தேடி சென்ற பகுதியில் ஆற்றை கடக்க முற்பட்டபோது, கால் தவறி ஆற்றில் விழுந்து, நீரில் அடித்து செல்லப்பட்ட காட்சி அப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமெரா காட்சியின் மூலம் உறுதி செய்யப்பட்டிருந்ததாகவும் தெரிவித்திருந்தனர்.

**“ நுவரெலியா நீதவானின் மரண விசாரணைகளின் பின் சடலம் நுவரெலியா சட்ட மருத்துவ அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்**

இந்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார், தேடுதல் பணியிலும் ஈடுப்பட்டிருந்தனர்.

இந்த நிலையிலேயே குறித்த இளைஞன் சமூர்த்தி வங்கிக்கு அருகாமையில் உள்ள ஓடை ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நுவரெலியா நீதவானின் மரண விசாரணைகளின் பின் சடலம் நுவரெலியா சட்ட மருத்துவ அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.



## பதவிகளுக்கும் சலுகைகளுக்கும் கூட்டணி விலைபோகாது

**உதயா எம்.பி சொல்கிறார்**

■ எஸ். சதீஸ்

தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர்களும் எமது கூட்டணியும் பதவிகளுக்கும் சலுகைகளுக்கும் ஒருபோதும் விலைபோகாது என தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதி தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம். உதயகுமார் தெரிவித்தார்.

பொகவந்தலாவ லின்போட் தோட்டப் பகுதியில் அமைக்கப்பட்ட வீடமைப்பு திட்டத்திற்கு குடிநீர் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், நாடு தற்பொழுது எதிர்நோக்கியிருக்கின்ற பொருளாதார பிரச்சினையின் காரணமாக, நாட்டை மீட்டெடுக்க தமிழ் முற்போக்கு கூட்டணி சர்வகட்சி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும்.

மலையகத்தில் எத்தனையோ தலைவர்கள் இருந்தார்கள். மக்கள் மத்தியில் பல்வேறு வாக்குறுதிகளை முன்வைத்தார்கள். ஆனால் மலையகத்தில் எவ்வித அபிவிருத்தி திட்டங்களையும் மேற்கொள்ளாது ஒரு குருகிய நான்கு வருட காலப்பகுதியில் மலையகத்தில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திய ஒரே தலைவர் பழனி திகாம்பரம் மாத்திரமே என்றார்.

# தியாகத்துக்கான கோரிக்கை சுற்றறிக்கைக்குள் முடங்கிவிடக்கூடாது

"வாயையும் வயிற்றையும் கொஞ்ச நாளைக்கு இறுகக் கட்டிக்கொள்ளுங்கள்; இன்னும் கொஞ்ச நாள்களுக்குள் மீண்டெழுந்துவிடுவோம்" என்ற கூற்றுகள், இன்று நேற்றல்ல; இறுதி யுத்த காலத்தில், தென்னிலங்கையில், புலிகளுக்கு எதிரான பிரசாரங்களின் போது, மக்களிடம் விதைக்கப்பட்ட 'விதை'யாகும்.

மக்களும் விழித்தெழுந்து, விழிப்புணர்வுடன் செயற்பட்டனர். அதனால், தென்னிலங்கையில் புலிகளால் திட்டமிடப்பட்டிருந்த பல தாக்குதல்கள் கைகூடாமல் போயின.

இறுதி யுத்தத்துக்குப் பின்னர், அவ்வப்போதும் 'தியாகம் செய்ய முன்வாருங்கள்' என்ற கோரிக்கை மக்களிடத்தில் முன்வைக்கப்பட்டது. கொரோனா காலத்திலும், பொருளாதார நெருக்கடிக்குள் நாடு விழுந்து கிடக்கும் தற்காலத்திலும், இந்தக் கோரிக்கை மீண்டும், மீண்டும் முன்வைக்கப்படுகின்றது.

தனியொரு மனிதனாக முன்னின்று பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களை முன்வைத்துக்கொண்டிருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, செலவுகள் சிலவற்றை கட்டுப்படுத்தியும் காண்பித்துள்ளார். ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடரை, எளிமையான முறையில் ஆரம்பித்து வைத்து, செலவுகளைக. குறைத்து முன்மாதிரியாகத் திகழ்ந்தார்.

அன்றையதினம், பாராளுமன்ற உணவகத்தில் வழங்கப்பட்ட தேநீர் உபசாரத்துக்கான கட்டணத்தை, தனது சொந்தப் பணத்தைச் செலுத்தினார். வாகனங்கள் புடைசூழப் பயணிப்பதை தவிர்த்துக்கொண்டார். ஆனால், அதிகாரத்தில் இருப்பவர்கள் சகலரும், இவ்வாறு நடந்துகொள்வார்களா? "இல்லை" என்றுதான் பதிலளிக்க வேண்டும்.

அதிகாரத்தில் இருப்பவர்களில் பெரும்பாலானோர், வாகனங்கள் புடைசூழ பயணிப்பதை அவதானிக்கமுடிகிறது. இது வீண் செலவாகும். சமூகத்தில் வறுமையில் வாடும் மக்களுக்கு, நிவாரணம் வழங்குவதற்கு அரச துறையினரும் இயன்றளவு தியாகங்களைச் செய்து, முன்னுதாரணமாகத் திகழ வேண்டுமென, ஜனாதிபதி அறிவுரை வழங்கியுள்ளார்.

அரச அலுவலகங்களுக்குச் செல்லும் சாமானியர்களைக் காத்திருக்கவிடாமல், அலைக்கழிக்காமல், தேவையான ஆவணங்களைத் துரிதமாக கொடுத்தால் அதுவே, பெரும் தியாகமாகும். அதேபோல, தங்களுக்குத் தேவையான ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கான சரியான தகவல்களையும் பத்திரங்களையும் கொண்டுவரவேண்டியது, பொதுமக்களின் பொறுப்பாகும்.

கொரோனாவுக்குப் பின்னர், பல செயற்பாடுகள் நிகழ்நிலைக்குள் சென்றுவிட்டன. ஆகையால், மாவட்டங்களில் இருக்கும் உயரதிகாரிகளுடன் முக்கியமான கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டுமாயின், அவற்றை நிகழ்நிலையின் ஊடாக நடத்தலாம். அதனூடாக, செலவுகளையும் காலத்தையும் மீதப்படுத்திக்கொள்ளலாம்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள், தங்களுடைய ஒருமாத சம்பளத்தை நன்கொடையாக கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். எனினும், இரண்டொருவர் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

மக்கள், இன்றும் வாயையும் வயிற்றையும் கட்டிக்கொண்டுதான் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இந்நிலையில், தியாகங்களைச் செய்ய வேண்டுமென்ற ஜனாதிபதியின் கோரிக்கை, சுற்றறிக்கைக்குள் மட்டுமே முடக்கிவிடாது, செயலில் இருக்கவேண்டுமென வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

விழிகள் இருந்தும் உலகை நோக்காத பலர், எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இத்தகையவர்கள் உலகில் எது நடந்தாலும் கண்டுகொள்ள மாட்டார்கள். சின்னச் சின்ன கேள்விகளைக் கேட்டாலும் பதில் சொல்ல மாட்டாரகள். தங்களைப் பற்றியே யோசிப்பார்கள்; உலகோடு ஒட்டவும் மாட்டாரகள்.

வையகத்தில் நாங்கள் ஒரு சிறு புள்ளியில் வாழ்கின்றோம். ஆனால், பரந்த உலகில், ஏதோவொரு வழியில் தொடர்பு கொண்டவாறே இருக்கின்றோம்.

நவீன தொடர்புமுறைகள் உள்ளங்கைகளில் வந்துவிட்டன. பயணங்கள் சுலபமாகி விட்டன. விஞ்ஞான வசதிகள் பெருகி விட்டன. ஆனால், மனித இனத்தின் ஒருசாரார், குறுகிய நோக்கத்துடன், ஏனோதானோ என வாழ்வது, பூமிக்கு அழகானது அல்ல!

சகலரும் கல்வி கற்க வேண்டும். கருத்துச் சுதந்திரம் அவசியமானது; விரும்பிய கல்வியைக் கற்க வசதிகள் பெருக வேண்டும். அரசியலில், நல்ல சிந்தனையும் புதுமையான சிந்தனையும் கொண்டோரும் இருக்க வேண்டும்.

ஆட்சிப் பொறுப்பில், குறிப்பிட்ட இனம் மட்டும் ஆதிக்கம் செலுத்தாமல், அனைத்து இனங்களும் அங்கம் வகிக்க வேண்டும். விழிகளை விரித்து நோக்கு!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

ஆதிக்கப் போட்டியின்

# களமாக மாறுகின்றதா இலங்கை?

மொஹமட் பாதுஷா

இத்தனை சர்ச்சைகளுக்கும் மத்தியில், சீனாவின் ஆய்வு மற்றும் கண்காணிப்புக் கப்பல், இலங்கையின் தென்கோடி துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

இலங்கை அரசாங்கம் இது விடயத்தில், எந்த மறைமுக எதிர்பார்ப்பையும் கொண்டிருக்கவில்லை என்றால், எந்தக் கோணத்தில் பார்த்தாலும் இந்தியா சீனா அதிகாரப் போட்டியின் களமாக, இலங்கை மாறுவது நல்லதல்ல.

இந்தியாவின் கடுமையான எதிர்ப்பு, இலங்கையின் கோரிக்கையை புறக்கணித்த சீனாவின் எகத்தாளப் போக்கு ஆகியவற்றுக்கு இடையில், இலங்கையின் அரசியல், இராஜதந்திரம், வெளியுறவுக் கொள்கை எல்லாம் மாட்டிக் கொண்டுள்ளதோ என்றுதான் சிந்திக்க வேண்டியுள்ளது.

கடந்த இரண்டரை வருடங்களில், இலங்கையில் கப்பல் சர்ச்சைகள் தொடர் கதையாகி உள்ளன. இலங்கைக்கு வந்த கப்பல்களும் நாட்டுக்கே வராத கப்பல்களும், இதில் உள்ளடங்குகின்றன.

இரண்டு வருடங்களுக்கு முன்னர், இலங்கையின் கிழக்குக் கடற்பரப்பில் பயணித்த எண்ணெய்க் கப்பலொன்றில் தீ ஏற்பட்டது. அதன் பின்னர், கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த 'நியூ டயமண்ட்' கப்பலில் ஏற்பட்ட தீ, பாரிய அனர்த்தமாகியதுடன், சுற்றாடல், வாழ்வாதம் போன்றவற்றின் மீதும் பெரும் பாதிப்புகளையும் ஏற்படுத்தியது.

சேதனப் பசளை என்ற பெயரில், சீனாவில் இருந்து ஆபத்தான குப்பைகளை ஏற்றி வந்த கப்பல் விவகாரம், நீதிமன்றம் வரை சென்றது. இந்நிலையில், எரிபொருட்களை ஏற்றிக் கொண்டு வந்த ஓரிரு கப்பல்களுக்கு, கொடுப்பனவைச் செலுத்த முடியாத அளவுக்கு, செலாவணி நெருக்கடி உச்சம் தொட்டிருந்தது.

இதன்பின்னர் ஏற்பட்ட டொலர் தட்டுப்பாடு மற்றும் பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக, துறைமுகங்களுக்கு கப்பல்களே வரமுடியாத நிலை உருவானது. இது, பல மாதங்களாக ஒரு சர்ச்சையாக நீடித்தது.

ஆனால், இவற்றை எல்லாம் மிகைத்த சர்ச்சைகளுக்கும் சிக்கல்களுக்கும், சீனாவின் 'யுவான் வங்க் 5' என்ற ஆய்வுக் கப்பல் வழியேற்படுத்திக் கொடுத்துள்ளது.

இலங்கை எல்லா நாடுகளுடனும் நல்லுறவைப் பேணும் நாடு. அதுமட்டுமன்றி, இப்போது அனைத்து வழிகளிலும் உதவியை நாடி நிற்கின்ற தேசமும் ஆகும். எனவே, எந்த நாட்டையும் பகைக்கவோ எதிர்த்தாடவோ மாட்டாது என்பதே யதார்த்தமானது.

அந்த வகையிலேயே பாகிஸ்தானின் யுத்தக் கப்பலுக்கும் சீனாவின் ஆய்வுக் கப்பலுக்கும் முறையே கொழும்பு, ஹம்பாந்தோட்டை துறைமுகங்களில் நங்கூரமிடுவதற்குச் சம்மதம் தெரிவித்திருக்கலாம் என்று கருத இடமுள்ளது. ஆனால், சீனக் கப்பலின் வருகையை கண்டு, இந்தியா பெரிதும் அஞ்சுவதுதான், சிக்கலை ஏற்படுத்தி உள்ளது.

சீனாவின் 'யுவான் வங்க் 5' கப்பல், இலங்கையை நோக்கி வருகின்றமையை, இந்தியா தனது அதிநவீன கண்காணிப்புக் கருவிகள் மூலம் கண்டறிந்ததாகக் கூறப்படுகின்றது. இது பற்றி, இலங்கையிடம் கேட்டபோது, ஆரம்பத்தில் அதனை மறுதலிக்கும் பாங்கிலான பதிலையே அரசாங்கம் வழங்கியிருந்தது. ஆனால், பின்னர் 'முழுப் பூசணிக்காயும்' வெளியில் வந்தது.

சீனாவும் இந்தியாவும், ஆசியாவில் அதிகாரப் போட்டியொன்றை நடத்திக் கொண்டிருக்கின்றன. இது புவிசார், பொருளாதார மற்றும் இராணுவ ரீதியான பலப்பரீட்சை என்பது உலகறிந்த இரகசியம்தான். எனவே, பரஸ்பரம் இரண்டு நாடுகளும், மற்றைய நாட்டின் பலத்தையும் பலவீனத்தையும், இலங்கையை விட நன்கு புரிந்து வைத்திருக்கின்றன.

அந்த வகையிலேயே சீனாவின் 'யுவான் வங்க் 5' கப்பல், ஆய்வு மற்றும் ஆராய்ச்சிக் கப்பல் என்று சொல்லப்பட்டாலும், நிஜத்தில் அது அதிநவீன கண்காணிப்பு மற்றும் நோட்டமிடும் வசதிகளைக் கொண்டது என்ற விடயம், கொழும்புக்கு தெரியாமல் இருக்கலாம்; ஆனால், புதுடெல்லிக்கு நன்கு தெரியும்.

தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்று கருதுகின்ற ஒரு சிறிய நாடான இலங்கையில், அதுவும் 'பட்டுப்பாதை'க்கு அண்மித்த துறைமுகம் ஒன்றில், ஒரு வாரம் தரித்து நிற்பது, தமக்கு ஆபத்தாக அமையும் என்று இந்தியா கருதுகின்றது. இந்தியாவை, இந்தக் கப்பல் கண்காணிக்கலாம் என்ற அச்சமே இதற்குக் காரணமாகும்.

இவ்விடயத்தை, இந்தியா நாசுக்கான முறையில், இலங்கைக்கு வெளிப்படுத்தியது. முதலில் "கப்பல் எரிபொருள் நிரப்பவே வருகின்றது" என்று அரசாங்கம் கூறியது. பின்னர், குறைந்தபட்சம் இக்கப்பலின் வருகையை தாமதிக்கவாவது நடவடிக்கை எடுக்குமாறு, சீனாவிடம் ஒரு கோரிக்கையை இலங்கை அரசு முன்வைத்தது.

> எந்த வெளிநாடுகளும் தமது அரசியல், இராணுவ ஆதிக்கத்தை உரசிப் பார்ப்பதற்கான களமாக, இலங்கையை பாவிக்க இடமளிக்க முடியாது. அதன் விளைவுகள் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஆபத்தானவையாக இருக்கும் என்பதே உலக அனுபவம் ஆகும்

ஆனால், சீனா ஓர் எகத்தாளமான பதிலை வழங்கியிருந்தது. இந்தியா, 'இதில் மூக்கை நுழைக்கக் கூடாது' என்று சீனா, சொல்லாமல் சொல்லியிருந்தது. இது இவ் விவகாரத்தை மேலும் பாரதூரமான விடயமாக மாற்றியது.

எது எவ்வாறிருப்பினும், கடைசியில் இந்தியாவின் ஆட்சேபனையையும் மீறி, ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் இக்கப்பல் நங்கூரமிடுவதற்கான அனுமதியை, இலங்கை வழங்கிவிட்டது. இதற்கு ஒரு விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கைக் கடற்பரப்புக்குள் எவ்விதமான ஆய்வுப் பணிகளையும் நடத்தக் கூடாது என்ற நிபந்தனையின் அடிப்படையிலேயே, இவ்வனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பிந்திய கதையும் கூறப்படுகின்றது.

ஆனால். இதில் எந்த நாடு சொல்கின்ற, எந்த விளக்கம் உண்மையானது என்பதும், இந்தக் கப்பல் 'சும்மா' நின்றுவிட்டுப் போவது, எந்தளவுக்கு சாத்தியம் என்பதும் ஆராயப்பட வேண்டிய விடயங்களாகும்.

இலங்கையின் புவிசார் அமைவிடம் என்பது மிக முக்கியமானது. அதுமட்டுமன்றி, சாதகமான துறைமுகங்கள், இயற்கை வளங்கள் போன்றவற்றையும் கொண்டுள்ளது. இலங்கையில் தமக்கு வேண்டிய 'ஏதாவது ஒன்றை' செய்துகொள்ள இந்தியா, சீனா மட்டுமன்றி, அமெரிக்கா போன்ற நாடுகளும் தருணம் பார்த்து, காய்களை நகர்த்திக் கொண்டிருக்கின்றன.

நமது நாட்டில் இடம்பெறுகின்ற இன வன்முறைகள், அரசியல் குழப்பங்கள், ஸ்திரமற்ற நிலைமைகளின் போது, கடன்கள், உதவிகள், செயற்றிட்டங்கள், நட்புறவு என்ற போர்வைகளைப் போர்த்திக் கொண்டு வெளிநாடுகள், இலங்கையில் தமது நலன்களை நிலைநாட்டிக் கொள்ளும் உள்நோக்கத்துடன் புகுந்து விளையாடுகின்றன என்பதே, 'திரைக்குப் பின்னால்' உள்ள நிதர்சனங்களாகும்.

இலங்கையில் நடக்கின்ற ஒவ்வொரு சம்பவத்துக்குப் பின்னாலும், பெரிய பெரிய நிகழ்ச்சி நிரல்கள் இருக்கின்றன. அந்த வகையில், ஆட்சி மாற்றங்களை மட்டுமன்றி ஒவ்வொரு நிகழ்வின் ஆழ அகலத்தையும் அலச வேண்டியிருக்கின்றது.

அந்த வகையில் நோக்கினால், இலங்கைக்கு என்ன நல்லது கெட்டது நடந்தாலும் பரவாயில்லை, தங்களுடைய ஆதிக்க, பாதுகாப்பு நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் இந்தியாவும் சீனாவும் சுயநலமாகச் செயற்படுகின்றன என்பதையே, இந்தக் கருத்து மோதல்கள் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

எனவே, இலங்கையை தமது அதிகாரப் போட்டிக்கான அல்லது 'பனிப்போர்' ஒன்றுக்கான, ஒரு களமாகப் பயன்படுத்த, முயற்சிகள் எடுக்கப்படுகின்றதா என்பது குறித்தும் சிந்திக்க வேண்டியுள்ளது. அத்துடன், இலங்கையின் அரசாங்கம், இதனை எவ்விதம் கையாள்கின்றது அல்லது, செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதையும் கூர்ந்து நோக்க வேண்டியுள்ளது.

இலங்கை என்பது இறைமையுள்ள தனித் தேசம். இந்தியாவின் துணை மாநிலமோ அல்லது, சீனாவின் ஆதிக்க நிலப்பரப்போ அல்ல என்பதை, அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய எல்லா நாடுகளுக்கும், தெளிவாகப் புரியும் விதத்தில் அரசாங்கம், இராஜதந்திர மொழியில் சொல்ல வேண்டும்.

அதைவிடுத்து, இந்தியா எதிர்ப்புத் தெரிவிக்கின்ற சூழலில், இலங்கையின் கோரிக்கையையும் புறக்கணித்து விட்டு, சீனக் கப்பல் வருவதும், அரசாங்கம் தனது பிடியிலிருந்து இறங்கி வந்து, அனுமதி அளிப்பதும், எண்ணிக்கூடப் பார்க்க முடியாத எதிர்வினைகளை, மக்கள் மீது தோற்றுவிக்கும்.

சீனாவால் 99 வருட குத்தகைக்கு எடுக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு, அந்த நாட்டின் கப்பலொன்று வர முடியாது என்று, எடுத்த எடுப்பில் கூறிவிட முடியாது. அதேபோன்று, இந்தியாவின் பாதுகாப்புசார் கரிசனையிலும், நிறையவே நியாயம் இருக்கின்றது.

இலங்கையர் என்ற ரீதியில், நமக்கு இதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. இது நமது சக்திக்கு அப்பாற்பட்ட விவகாரமாகும். ஆனால், எந்த வெளிநாடுகளும் தமது அரசியல், இராணுவ ஆதிக்கத்தை உரசிப் பார்ப்பதற்கான களமாக, இலங்கையை பாவிக்க இடமளிக்க முடியாது. அதன் விளைவுகள் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு ஆபத்தானவையாக இருக்கும் என்பதே உலக அனுபவம் ஆகும்.

## கடிதங்கள்

### கள்ளவியாழையில் பாலம் அமையுமா?

கதிர்காமத்துக்கான காட்டுப்பாதையின் மத்தியில் அமைந்துள்ள கள்ளவியாழை எனும் இடத்தில், பாதையின் குறுக்காக ஓடும் ஆற்றைக் கடப்பதற்கு, அடியார்கள் பெரும் சிரமப்படுகின்றார்கள்.

ஒவ்வொரு வருடமும், இந்த ஆற்றைக் கடக்கும் போது, பலர் தவறி விழுந்த சம்பவங்கள் பல உண்டு. அவர்களது உடைமைகள், ஆற்றில் அடித்துச் செல்லப்படுவதும் காணாமல் போவதுமான பல துர்நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

இந்தப் பாதையால் பயணித்து ஆற்றைக் கடப்போர், 'கத்தியின் மேல் நடப்பது போல்' மிகக்கவனமாக நடக்க வேண்டும். ஏனெனில், ஒரிரு கம்புகளின் மேலாகத்தான், கவனமாக நடக்க வேண்டி இருக்கிறது.

குழந்தைகள், வயோதிபர்கள் போன்றோர், பெரும்பாலும் தவறி ஆற்றுக்குள் விழுந்து விடுகின்ற துர்ப்பாக்கிய நிலைமையும் தொடர்கிறது. ஆனால், ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான அடியார்கள், இக்கம்புகளின் மேலால் பயத்துடன், சுமைகளோடு நடந்து, தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக் கொள்கிறார்கள். எனவே, அப்பகுதிக்கு பொறுப்பான ஜீவராசிகள் திணைக்களத்தினர், இதற்கு ஒரு சிறிய பாலத்தை அமைத்துத் தர வேண்டும் என்று, அடியார்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

–வி. ரி சகாதேவராஜா



புதுடெல்லி



# தேசத்தை அரிக்கும் ‘கறையான் ஊழல்’

### சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி

இந்தியாவின் 75 சுதந்திர தினம் வெகுவிமர்சையாக நேற்று (15) கொண்டாடப்பட்டது.

புதுடெல்லி செங்கோட்டையில் பிரதமர் நரேந்திர மோடி தேசியக் கொடி ஏற்றினார். தேசிய கீதம் ஒலிக்கப்பட மரியாதை செலுத்தினார். பின்னர் நாட்டு மக்களுக்காக பிரதமர் நரேந்திர மோடி உரையாற்றினார்.

“ஊழலும், வாரிசு அரசியலும் தான் இந்தியா எதிர்கொண்டுள்ள மிகப்பெரிய சவால்கள். ஊழல் தேசத்தை அரிக்கும் கரையான். ஊழலை ஒழிக்காமல் ஊழல்வாதிகளை தண்டிக்கும் மனநிலையை மக்கள் வளர்த்துக் கொள்ளாதவரை தேசம் அதன் முழுவேகத்தில் முன்னேற இயலாது என்றார். இந்த வேளையில் நான் குறிப்பிட வேண்டிய மற்றொரு சவால் வேண்டியவர்களுக்கு செய்யப்படும் சலுகை. குடும்பத்தினர், உறவினர்கள், வேண்டியவர்கள் என்று காட்டப்படும் சலுகைகளும், செய்யப்படும் சிபாரிசுகளும் பெரிய தீமை. இது உண்மையான திறமைசாலிகளின் வாய்ப்பைப் பறித்துவிடும். தகுதியும், திறமையும் கொண்டவர்களுக்கு வாய்ப்பளித்தால் தான் நமது தேசம் வளர்ச்சி காணும்” என்று பிரதமர் மோடி பேசினார்.

நாடு, இன்னும் 25 ஆண்டுகளில் வளர்ந்த தேசமாக இருக்கும். அதற்கு நாம் ஐந்து உறுதிமொழிகளை ஏற்க வேண்டுமென தெரிவித்த பிரதமர் மோடி, தேச வளர்ச்சியில் பெண்களின் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்டுப் பேசினார்.

## 5 உறுதிமொழிகள்

“நம் நாடு இன்னும் 25 ஆண்டுகளில் வளர்ந்த தேசமாக இருக்கும். அதற்கு நாம் ஐந்து உறுதிமொழிகளை ஏற்க வேண்டுமென இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இந்தியாவின் 75ஆவது சுதந்திர தின உரையில் குறிப்பிட்டார்.

நாம் பெரிய இலக்குகளுடன் முன்னேறிச் செல்ல வேண்டும். அந்த இலக்கு இந்தியாவை வளர்ந்த தேசமாக்குவது.

எல்லா வகையான அடிமைத்தனத்தையும் வேரறுக்க வேண்டும். நமது பாரம்பரியத்தை நினைத்து எப்போதும் பெருமிதம் கொள்ள வேண்டும்.

ஒற்றுமையின் பலத்தை உறுதியாக பற்றுக் கொள்வோம்.

குடிமகனின் கடமைகளை ஆற்றுவது. முதல்வர்களுக்கும், பிரதமருக்கும் கடமை இருக்கிறது

இந்த 5 உறுதிமொழிகளையும் ஏற்று நாட்டு மக்கள் பின்பற்றினால் இந்தியாவை இன்னும் 25 ஆண்டுகளில் வளர்ந்த நாடாக மாற்ற முடியும். நம் விடுதலை வீரர்களின் கனவு நிறைவேறும் என்று பிரதமர் மோடி கூறினார்.

சென்னை



# விலங்குகளை கடத்திய இளைஞன் சிக்கினார்

சுற்றுலா விசாவில் சென்று, சட்டவிரோதமான முறையில் விலங்குகள் சிலவற்றை கடத்திவந்த ராமநாதபுரம் கீழக்கரையைச் சேர்ந்த 21 வயதான இளைஞனை சென்னை பொலிஸார் கைது செய்து வன இலாகா திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

தாய்லாந்து நாட்டிலிருந்து தாய் ஏர்லைன்ஸ் பயணிகள் விமானம் சென்னை விமான நிலையத்துக்கு நேற்று முன்தினம் நள்ளிரவு வந்தது. அதில் வந்த பயணிகளை சுங்க அதிகாரிகள் சோதனை செய்தனர்.

பெரிய கூடையுடன் வந்த இளைஞனை பொலிஸார் சோதனை செய்தனர். அந்த கூடையில் தனித்தனி சிறிய பொதிகளில் பாம்புகள், குரங்கு, ஆமை போன்றவர்கள் கடத்தி வரப்பட்டிருப்பது தெரியவந்தது.

இதையடுத்து அதிகாரிகள் விசாரிக்கும் பொழுது அவர் முறையான தகவல் எதுவும் தரவில்லை. அதற்கு வேண்டிய ஆவணங்களும் அவர் வைத்திருக்கவில்லை. இதனால் சுங்கத்துறை அதிகாரிகள் மத்திய வனக்குற்ற பிரிவு அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர்.

வட அமெரிக்கா நாட்டில் உள்ள கிங் ஸ்நேக் என்ற விஷமற்ற பதினைந்து பாம்புகளும், மேலும் ஆப்பிரிக்காவின் மேற்கு, மத்திய பகுதிகளில் உள்ள காடுகளில் வசிக்கும் பால் பைத்தான் என்ற ஒரு வகை மலைப்பாம்பு குட்டிகள் 5, ஆப்பிரிக்க நாட்டில் சேஷல்ஸ் தீவில் காணப்படும் அல்ட்ரா பிராட் டாடாஸ் என்ற ஒருவகை ஆமை வகைகள் 2, மற்றும் மத்திய ஆப்பிரிக்காவில் வசிக்கும் டி பிராசா மங்கி என்ற குரங்கு குட்டி 1 என மொத்தம் 23 விலங்குகள் இருந்தன.

சென்னை,

# அகவிலைப்படி உயர்த்தப்படும்

### தமிழக முதலமைச்சர் அதிரடி

அரசு ஊழியர்கள், ஓய்வூதியர்களுக்கான அகவிலைப்படி 3 சதவிகிதம் உயர்த்தப்படுவதாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இந்தியா சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. நாட்டின் 76-வது சுதந்திர தினம், சுதந்திர திருநாள் அமுதப்பெருவிழாவாக உற்சாகத்துடனும், கோலாகலத்துடனும் நேற்று (15) கொண்டாடப்பட்டது.

இந்நிலையில், நாட்டின் சுதந்திரதின விழாவையொட்டி சென்னை செயிண்ட் ஜோர்ஜ் கோட்டை கொத்தளத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், இந்திய தேசிய



கொடியை ஏற்றினார்.

இதனை தொடர்ந்து உரையாற்றிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி 3 சதவீதத்தில் உயர்த்தப்படும் என அறிவித்தார்.

அரசு ஊழியர்களுக்கான அகவிலைப்படி 31 சதவீதத்தில் இருந்து 34 சதவீதமான உயர்த்தப்படுவதாக அறிவித்தார்.

ராமநகர்

# காதலியுடன் சாமியார் ஓட்டம்

ராமநகர் மாவட்டம் மாகடி தாலுகா சோலூரில் குத்தகே மடம் உள்ளது. இந்த மடத்தின் சாமியாராக இருந்து வருபவர் சிவமகந்தே சுவாமி என்ற ஹரீஷ் சுவாமி.

மடத்தில் இருந்த சாமியார் திடீரென்று மாயமாகி விட்டார். அவர், ஒரு பெண்ணை காதலித்து வந்ததாகவும், அந்த பெண்ணுடன் மடத்தில் இருந்து சாமியார் ஓடி இருப்பதும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில், சாமியார் எழுதி வைத்திருந்த கடிதம் மடத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது. அந்த கடிதத்தில் சாமியாராக வாழ்க்கையை என்னால் தொடர முடியவில்லை. நிம்மதி இல்லாமல் வாழ்ந்து வந்தேன். அதனால் மடத்தின் வாழ்க்கையில் இருந்து விடுபட்டுள்ளேன். என்னை யாரும் தேட வேண்டாம். எங்கோ சென்று நிம்மதியாக வாழ உள்ளேன் என அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூலக்குளம்

# ஆசைக்கு வற்புறுத்திய ஊழியர் கைது

மூலக்குளம் பகுதியைச் சேர்ந்த 40 வயது பெண்ணொருவர் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு உடல்நிலை பாதிக்கப்பட்டு புதுச்சேரி அரசு ஆஸ்பத்திரிக்கு சென்று சிகிச்சை பெற்றுள்ளார்.

அங்கு ஊழியராக வேலை செய்யும் 35 வயதானவர், இரண்டு குழந்தைகளுக்கு தந்தையான அவர், அப்பெண்ணிற்கு தேவையான உதவிகளை செய்து கொடுத்தார். அந்த அறிமுகத்தால் அப்பெண்ணின் கையடக்க தொலைபேசி இலக்கத்தை வாங்கி வைத்துக்கொண்டார். அந்த

அப்பெண்ணிடம் அடிக்கடி பேசிய அவர், நாளடைவில் இரட்டை அர்த்தம் கொள்ளும் வகையில் சில ஆபாச வார்த்தைகளையும் பேசியதாக கூறப்படுகிறது. அதிர்ச்சியடைந்த அந்த பெண், ஆணின் இலக்கத்தை முடக்கம் (பிளாக்) செய்து விட்டார்.

இந்த நிலையில், அந்த பெண்ணை நேரில் சந்தித்து பேசிய அவர்,. தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்ததுடன்,. இனிமேல் அவ்வாறு பேச மாட்டேன் என்று கூறி இருக்கிறார்.

இதனை தொடர்ந்து அந்த பெண் மீண்டும் அவருடன் பேசுவதை தொடர்ந்தார். இதற்கிடையே அவர் மீண்டும் அந்த பெண்ணிடம் ஆபாசமாக பேசியதுடன், வாட்ஸ் அப் மூலம் குறுந்தகவலும் அனுப்பி தனது ஆசைக்கு இணங்க வலியுறுத்தி தொல்லை கொடுத்ததாக கூறப்படுகிறது.

இது குறித்து ரெட்டியார்பாளையம் பொலிஸ் நிலையத்தில் அப்பெண் முறைப்பாடு செய்ததை அடுத்து, ஊழியரை பொலிஸார் கைது செய்து, சிறையில் அடைத்துள்ளனர்.

# நயன்தாரா ‘கெட்டபில்’ ஆர்த்தி

### விக்னேஷ் சிவன் வாழ்த்து

தென்னிந்திய திரை உலகில் லேடிஸ் சூப்பர் ஸ்டாராக திகழ்ந்து கொண்டிருக்கும் நயன்தார, இயக்குநர் விக்னேஷ் சிவனை காதல் திருமணம் செய்து கொண்டார்.

அப்போது அவர் சிகப்பு நிற புடவை மற்றும் விலை உயர்ந்த அணிகலன்கள் அணிந்திருந்தார். அந்தப் புகைப்படங்கள் கூட இணையத்தில் வைரலாகின.

இந்நிலையில், அதனை பிபி ஜோடிகளில் கண்டெஸ்ட்டெண்ட் ஆக கலந்துகொண்டிருக்கும் பிரபல காமெடி நடிகையான ஆரத்தி கணேஷ், அந்த நயன்தாராவின் திருமண கெட்டப்பை ரீகிரியேட் செய்து, என்ன கொடுமை சார் இது? எக்ஸ்பெக்டேஷன் அண்ட் ரியாலிட்டி? என்று புகைப்படத்துடன் தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ளார். “

அது சமீபத்தில் இணையத்தில் வைரலாகி வந்ததை தொடர்ந்து, அதனைப் பார்த்த நயன்தாராவின் கணவரான விக்னேஷ் சிவன் “நீங்கள் மிக அழகாக இருக்கிறீர்கள் டியர் ஆரத்தி” என்று புகழ்ந்து வாழ்த்தி, ஆரத்தியின் பதிவிற்கு பதில் அளித்துள்ளார். அது தற்போது டுவிட்டரில் வைரலாகி வருகிறது.







### சந்திரமுகி 2 படத்திலும்

# வடிவேலுவின் அல்டிமேட் காமெடி

தமிழ் சினிமாவில் பி வாசு இயக்கத்தில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடிப்பில் வெளியாகி மிகப்பெரிய வெற்றியை பெற்ற திரைப்படம் சந்திரமுகி.

நீண்ட இடைவெளிக்கு பிறகு தற்போது இந்தத் திரைப்படத்தின் இரண்டாம் பாகம் உருவாகி வருகிறது.

பி வாசு இயக்கும் இந்தத் திரைப்படத்தில் ரஜினிக்கு பதிலாக ராகவா லாரன்ஸ் நடித்து வருகிறார். அவருக்கு ஜோடியாக மூன்று நடிகைகள் நடிக்க வடிவேலு மற்றும் ராதிகா சரத்குமார் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர்.

தற்போது இந்தத் திரைப்படத்தில் வடிவேலுவின் கதாபாத்திரம் குறித்து தகவல் தெரியவந்துள்ளது.

சந்திரமுகி படத்தை போலவே இந்தத் திரைப்படத்திலும் முருகேசா என்ற கதாபாத்திரத்தில் தான் வடிவேலு நடிக்கிறார்.

முதல் பாகத்தை காட்டிலும் இந்தத் திரைப்படத்தில் காமெடி அல்டிமேட்டாக இருக்கும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.






# புஷ்பாவுக்கு வில்லன் இல்லை; ஷாருக்கானுக்கே வில்லன்

### விஜய் சேதுபதி அறிவிப்பு

தமிழ் சினிமாவில் ஹீரோ என்ற சிறிய வட்டத்துக்குள் சிக்கிவிடாமல், எந்த வித கதாபாத்திரமாக இருந்தாலும் தயக்கம் காட்டாமல் நடித்து வரும் ஒரே ஒரு நடிகர் விஜய் சேதுபதி தான்.

பல போராட்டங்களை கடந்து தென்மேற்கு பருவக்காற்று படத்தின் மூலம் ஹீரோவானார் விஜய் சேதுபதி.

சமீபத்தில் கமல் நடிப்பில் லோகேஷின் இயக்கத்தில் வெளியான விக்ரம் படத்தில் வில்லனாக நடித்து மிரட்டினார் விஜய் சேதுபதி. கமல், ரஜினி, விஜய் என அனைத்து முன்னணி நடிகர்களின் படங்களிலும் வில்லனாக நடித்து பாராட்டை பெற்றுள்ளார். இந்நிலையில், அல்லு அர்ஜுன் நடிப்பில் வெளியான புஷ்பா படத்தின் இரண்டாம் பாகத்தில் விஜய் சேதுபதி நடிப்பதாக தகவல் வந்தது. எனினும், அதற்கு மறுப்புத் தெரிவித்து, விஜய் சேதுபதி விட்ட அறிக்கையில், தற்போது அட்லீ இயக்கத்தில் ஷாருக்கான் நடித்து வரும் ஜவான் படத்தில் தான் வில்லனாக நடித்து வருவதாகவும் அதைத்தவிர வேறு எந்தத் தெலுங்குப் படத்திலும் விஜய் சேதுபதி நடிக்க கமிட்டாகவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# முதல் நாளிலேயே விருமன் ரூ.4 கோடி வசூல்

தென்னிந்திய சினிமாவில் முன்னணி நடிகராக வலம் வருபவர் கார்த்தி. இவரது நடிப்பில் வெளியாகி இரசிகர்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ள திரைப்படம் விருமன்.

பி.ஜி முத்தையா இயக்கத்தில் கார்த்தி நடிப்பில் வெளியாகி வெற்றி பெற்ற கொம்பன் திரைப்படத்தை தொடர்ந்து இந்தத் திரைப்படம் வெளியாகி இரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

சூர்யாவின் தயாரிப்பில் யுவன் சங்கர் ராஜா இசையில் வெளியாகி உள்ள இந்தத் திரைப்படத்தில் கார்த்திக்கு ஜோடியாக அதிதி ஷங்கர் நடித்துள்ளார்.

தற்போது இந்தத் திரைப்படம் முதல் நாள் வசூலில் ரூபாய் 4 கோடி வரை தமிழகத்தில் வசூல் செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

இந்தத் திரைப்படத்தின் வசூல் மேலும் கணிசமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, விருமன் படக்குழுவினர் நடிகர் சங்க கட்டடத்துக்காக ரூ. 25 இலட்சம் காசோலையை வழங்கியுள்ளனர்.





பெல்ஜியம்


# இரு நாட்டில் இரு அறைகள்

பார்லே-ஹெர்டாக் என்பது நெதர்லாந்தின் எல்லையில் உள்ள ஒரு பெல்ஜிய நிலப்பகுதியாகும்.

இங்கு உள்ள நெதர்லாந்து இடம் பார்லே-நாசாவ் என்று அழைக்கப்படுகிறது. அதாவது ஒரே இடத்தை இரண்டாக பிரித்து பெல்ஜியத்துக்கு சொந்தமான இடம் பார்லே-ஹெர்டாக் என்றும், நெதர்லாந்துக்கு சொந்தமான இடம் பார்லே-நாசாவ் என்றும் அழைக்கப்பட்டுவருகிறது.

சிறிய க்ராஸ் குறிகளின் மூலம் இந்த எல்லை பகுதிகள் பிரிக்கப்படுகின்றன. இந்த எல்லைக்கோடு சில வீடுகளின் வழியாகவும் பயணிக்கிறது. இதனால் சிலரது வீட்டின் சமையலறை நெதர்லாந்திலும், வரவேற்பறை பெல்ஜியத்திலும் அமைந்திருக்கின்றன.

வீட்டின் வழியாக எல்லை கோடுகள் சென்றாலும் வீட்டின் முகப்பு பகுதி எந்த நாட்டில் இருக்கிறதோ அந்த வீட்டுக்காரரும் அந்த நாட்டை சேர்ந்தவர் ஆகிறார். மேலும் பார்லே-ஹெர்டோக் மற்றும் பார்லே-நாசாவில் இரண்டு அரசாங்கங்கள், இரண்டு கவுன்சில்கள், இரண்டு மேயர்கள் மற்றும் இரண்டு பாடசாலைகள் உள்ளன.

அத்துடன் பிளெமிஷ் மற்றும் டச்சு ஆகிய இரண்டு மொழிகளும் இரண்டு இடங்களின் அதிகாரப்பூர்வ மொழி என்பதால் இங்கு வசிப்பவர்கள் இரண்டு மொழிகளிலும் பேசுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான்

# 4 வருடங்களாகப் பணிபுரியாமல் ஊதியம் வாங்கும் நபர்

நபர் ஒருவர் பணிபுரியாமல் நான்கு வருடங்களாக ஊதியம் வாங்கி வரும் விநோத சம்பவம் ஜப்பானில் இடம்பெற்று வருகின்றது.

ஜப்பானைச் சேர்ந்தவர் ஷோஜி மோரிமோட்டோ (Shoji Morimoto). 36 வயதாகும் இவருக்கு ஏராளமான வேலை வாய்ப்புகள் தேடி வந்ததாக கூறப்படுகிறது. ஆனால், அவை அனைத்தையும் தவிர்த்து வந்த ஷோஜி, மிகவும் வித்தியாசமான வேலை ஒன்றை கையில் எடுத்துள்ளார்.

அதாவது மற்றவர்களுடன் நேரத்தினை செலவிடுவதன் மூலம் ஒரு கணிசமான தொகையை சம்மந்தப்பட்ட நபரிடம் இருந்தும் ஷோஜி சம்பளமாக வாங்கி வருகின்றார்.

உதாரணத்திற்கு குறிப்பிட்ட ஒரு இடத்திற்கு தனியாக செல்ல கூச்சமாக இருப்பவர்களுக்கு துணையாகச் செல்வது , பிறந்தநாளைத் தனியாக செலவழிக்கும் நபருடன் உடன் இருப்பது, , மனச் சுமைகளை இறக்கி வைக்க விரும்பும் நபர்களின் மனக் குமுறல்களை செவி கொடுத்து கேட்பது உள்ளிட்ட பல வேலைகளில் தான் ஷோஜி ஈடுபட்டு வருகிறார்.



அப்படி அவர்களுடன் இருக்கும் போது, அனைத்து செலவுகளையும் தான் சம்மந்தப்பட்ட நபர் தான் ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்காக , சுமார் 69 பவுண்ட் வரை கட்டணமாகவும் ஷோஜி பெற்று வருகிறார்.

2018 ஆம் ஆண்டு, இதற்காக ட்விட்டர் கணக்கை தொடங்கிய ஷோஜி, எதுவும் செய்யாத மனிதர் (Do-nothing man) என்ற பட்டத்துடன் அறியப்பட்டு வருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சுமார், இரண்டரை லட்சம் பேர் வரை, அவரை பின் தொடர்ந்து வரும் நிலையில், ஒரு நாளைக்கு சுமார் மூன்றில் இருந்து ஐந்து பேருக்கு வரை ஷோஜி சேவை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் கொரியா



# முகத்தில் 15 முறைகள் சத்திர சிகிச்சை செய்த யுவதி

தென்கொரியாவின் சியோல் நகரைவ் சேர்ந்தவர் செர்ரி லீ . 28 வயதான அவர் உலகின் மிக அழகான பெண்ணாக தோற்றமளிக்கவேண்டும் என விரும்பியுள்ளார்.

இதற்காக பிரபல நடிகையான கிம் கர்தேசியனைப் போன்று தனது உருவத்தை மாற்ற முடிவெடுத்துள்ளார். அந்த வகையில் இதுவரை சுமார் 15 தடவைகள் முகம், கண்கள், மார்பு, இடுப்பு மற்றும் பின்பகுதி என உடலின் பல்வேறு இடங்களில் அவருக்கு அறுவை சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த செர்ரி லீ 'கர்தேசியனை பார்த்து வளர்ந்தவள் நான். அவரை போலவே தோற்றமளிக்க வேண்டும் என விரும்பினேன். அவர் எப்போதும் எனக்கு ஓர் உந்துதலாக இருந்தவர். , நான் உண்மையில் முன்பிருந்ததற்கும், தற்போது இருப்பதற்கும் முற்றிலும் வேறுபட்ட நபராக காட்சியளிக்கிறேன். மேற்கத்திய பெண்ணாக தோன்றுகிறேன். எனது கொரிய குடும்பத்தினர் பலருக்கு என்னை அடையாளம் காணக்கூட முடியவில்லை" என பெருமையுடன் கூறுகிறார்.

இந்நிலையில் அவரது புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



ஆர்மீனியா




## சந்தையில் பயங்கர தீ விபத்து:

# ஒருவர் உயிரிழப்பு;51 பேர் காயம்

ஆர்மீனியாவின் தலைநகர் யெரெவனில் உள்ள சந்தையொன்றுக்கு அருகே உள்ள பட்டாசு களஞ்சிய சாலையில் எதிர்பாராத விதமாக நேற்று முன்தினம் தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது. இத்தீ விபத்தில் சிக்கி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனவும், 51 பேர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விபத்துக்கான காரணம் குறித்து எந்த தகவலும் வெளியாகவில்லை.

இந்தோனேசியா



# விவாகரத்தில் முடிந்த பிரம்மாண்டத் திருமணம்

இந்தோனேசியாவைச் சேர்ந்த ஹஜி சொண்டனி என்ற 65 வயதுடைய முதியவரும் , பியா பர்லண்டி என்னும் 19 வயது யுவதியும் கடந்த மே மாதம் திருமணம் செய்து கொண்டனர்.

கோடீஸ்வரான ஹஜி சொண்டனி, அந் நாட்டின் வழக்கப்படி பியா பர்லண்டிக்கு இலங்கை மதிப்பில் 5.57 கோடி ரூபாய் வரதட்சணை, வீடு மற்றும் வாகனம் கொடுத்து திருமணம் செய்திருக்கிறார்.

மேலும், திருமணத்திற்கான செலவுகளையும் மொத்தமாக அவரே செய்திருக்கிறார். இந்நிலையில் திருமணம் நடந்த இரு வாரங்களிலேயே அந்த பெண்ணிற்கு, அவரை பிடிக்கவில்லை எனக் கூறப்படுகிறது.இதனையடுத்து இருவரும் விவாகரத்து செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

# நியூசிலாந்தை வென்ற மேற்கிந்தியத் தீவுகள்



நியூசிலாந்துக்கு எதிரான மூன்றாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் ஆறுதல் வெற்றியைப் பெற்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், ஏற்கெனவே முதலிரண்டு போட்டிகளையும் வென்று தொடரை நியூசிலாந்து கைப்பற்றிய நிலையில், ஜமைக்காவில் நேற்று நள்ளிரவு நடைபெற்ற குறித்த போட்டியை வென்றதன் மூலம் தொடரை 1-2 என மேற்கிந்தியத் தீவுகள் இழந்தது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

நியூசிலாந்து: 145/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: கிளென் பிலிப்ஸ் 41 (26) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஒடியன் ஸ்மித் 3/29 [4], அகீல் ஹொஸைன் 2/28 [4], டொமினிக் ட்ரேக்ஸ் 1/19 [4], ஹெய்டன் வோல்ஷ் ஜூனியர் 1/16 [2])

மே. தீவுகள்: 150/2 (19 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷமராஹ் ப்ரூக்ஸ் ஆ.இ 56 (59), பிரண்டன் கிங் 53 (35), றொவ்மன் பவல் ஆ.இ 27 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: லொக்கி பெர்கியூசன் 0/16 [4], மிஷெல் பிறேஸ்வெல் 0/14 [2], மிற்செல் சான்ட்னெர் 0/30 [4])

போட்டியின் நாயகன்: பிரண்டன் கிங்

தொடரின் நாயகன்: கிளென் பிலிப்ஸ்

## டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:

# சம்பியனான இசிப்பத்தன

றோயல் கல்லூரியை 21-15 என்ற புள்ளிகள் கணக்கில் வென்று டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடர் முழுவதும் தோற்கடிக்கப்பட முடியாத அணியாக விளங்கி சம்பியனான இசிப்பத்தன கல்லூரி, மேஜர் மில்றோய் பெர்ணாண்டோ கிண்ணத்தையும் ஹவ்லொக் பார்க்கில் நேற்று முன்தினம் மாலை பெற்றுக் கொண்டது.

இசிப்பத்தன சார்பாக, நவீன் கனிஷ்க, ஸ்டீபன் ஜெயகாந்த் ஆகியோர் தலா ஒவ்வொரு ட்ரையைப் பெற்றதோடு, றினேஷ் சில்வா ஒரு பெனால்டிக்கான புள்ளிகளைப் பெற்றுக் கொண்டிருந்ததோடு, எம். பொதெஜு ஒரு கொன்வேர்ஷனையும், இரண்டு பெனால்டிக்கான புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்திருந்தார்.

றோயல் சார்பாக, பசிந்து ஹெஷான், தனுஜ சமரரத்ன ஆகியோர் தலா ஒவ்வொரு ட்ரையையும், நபீல் யஹியா ஒரு கொன்வேர்ஷனைப் பூர்த்தி செய்ததோடு, ஒரு பெனால்டிக்கான புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்திருந்தார்.

## இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் டொட்டென்ஹாம் செல்சி போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், செல்சியின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணிக்கும், டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பர்ஸுக்குமிடையிலான போட்டியானது 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

செல்சி சார்பாக, கலிடு குலிபலி, றீஸ் ஜேம்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். டொட்டென்ஹாம் சார்பாக, பியர்-எமில் ஹொய்பியா, ஹரி கேன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



## கல்முனை லெஜன்ஸ் வி.க தொடர்:

# வென்ற சாய்ந்தமருது பிளையிங்ஹோர்ஸ்



■ எம்.என்.எம். அப்ராஸ்

கல்முனை லெஜன்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்துகின்ற இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரில், கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற குழு நிலைப் போட்டியொன்றில் கல்முனை றினோன் விளையாட்டுக் கழகத்தை சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற றினோன், முதலில் துடுப்பெடுத்தாடி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 91 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு, 92 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பிளையிங்ஹோர்ஸ் விளையாட்டுக் கழகம் 16.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

## புத்தளம் ஜயா பார்ம் கால்பந்தாட்டத் தொடர்:

# அரையிறுதியில் நியூ ஸ்டார்ஸ்

■ எம்.யூ.எம். சனூன்

ஜயா பார்ம் நிறுவனத்தின் பிரதான அனுசரணையுடன் புத்தளம் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் ஒத்துழைப்புடனும் 12 அணிகள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு நியூ ஸ்டார்ஸ் தகுதி பெற்றது.

அண்மையில் நடைபெற்ற லிவர்பூலுடனான போட்டியில் வென்றே அரையிறுதிக்கு நியூ ஸ்டார்ஸ் தகுதி பெற்றிருந்தது. இப்போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்று சமநிலையில் இருந்த நிலையில், பெனால்டியில் 3-2 என்ற ரீதியில் நியூ ஸ்டார்ஸ் வென்றிருந்தது.

அதனடிப்படையில், முதலாவது அரையிறுதிப் போட்டியில் எருக்கலம்பிட்டியும், விம்பிள்டனும் மோதவுள்ளதுடன், இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் நியூ ஸ்டார்ஸும், யாழ். முஸ்லிம் யுனைடெட்டும் மோதவுள்ளன.




அரையிறுதிப் போட்டிகள் புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன. இறுதிப் போட்டி இம்மாதம் 26ஆம் திகதி பிற்பகல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 16 ஓகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.